பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஐப்பசி 16 | வியாழக்கிழமை 02.11.2017 | கதிர் 361

## ஜனவரியில் தேர்தல்

கொழும்பு, நவ.2

உள்ளூராட்சித் தேர்தலை எதிர் வரும் ஜனவரி மாதம் நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மா னித்துள்ளது.

இதன்படி அடுத்த ஆண்டு ஜன வரி மாதம் 20ஆம் திகதி முதல் 31ஆம் திகதிக்குள் தேர்தலை நடத் துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

பக்கம் 18

# உள்நாட்டில் தீர்வின்றேல் விளைவுகள் விபரீதமாகும்

## அரசி, பருப்பு நள்ளிரவு முதல் விலை குறைப்பு

கொழும்பு, நவ.2

நேற்றுநள்ளிரவுமுதல் சதொசவில் பொன்னிச் சம்பாமற்றும்பருப்பு ஆகிய வற்றின்விலைகள்குறைக் கப்படவுள்ளதாகதைத்தொ ழில் மற்

பக்கம் 18

## சர்வதேச அழுத்தம் மேலும் வலுவடையும் என்று கடுந்தொனியில் அரசை எச்சரித்தார் சம்பந்தன்

கொழும்பு, நவம்பர் 2

நாட்டில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் தேசியப் பிரச்சினையை உள்நாட்டில் தீர்க்காவிடின்,சர்வ தேசசமூகத்தின் அழுத்தம் மோசமடையும். இதனால் நிலைமைகள் மேலும் விபரீதமடையும். இதனை நினைவில் கொண்டு அரசு செயற்படவேண்டும்.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் வைத்து நல்லாட்சி அரசுக்குக் கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்தார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

ஒரு புதிய அரசமைப்பானது இலங்கையின் நிலையான சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கு இன்றியமையாத ஒன்று என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

பக்கம் 18



## இனங்களுக்கிடையே போர் நடக்க வாய்ப்பு

### சபையில் ஜே.வி.பி. எச்சரிக்கை

கொழும்பு, நவ.2

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுக்கும் இரா ணுவத்துக்கும் இடையிலேயே போர் நடை பெற்றது. ஆனால் எதிர்வரும் காலங்களில் இனங்களுக்கிடையில் போர் நடக்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் பக்கம் 18

## புதிய அரசமைப்பு பிரிவினைக்கே வழி

### பதறுகிறார் உதய கம்மன்பில



கொழும்பு, நவ.2

புதிய அரசமைப்பினால் பிரி வினைவாதம் வலுவடைந்துள்ள தாக பிவிதுறு ஹெல உறுமய கட் சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன் பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் பக்கம் 18

## தடை கண்டும் சளைக்காத மாணவர்கள் நேற்றும் முடங்கியது யாழ். பல்கலை



யாழ்ப்பாணம், நவ.2

யாழ்.பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களின் கல்வி நடவடிக்கைகளைப் பல்கலைக்கழக நிர் வாகம் நிறுத்தியுள்ளநிலையிலும், நேற்று மூன்றாவது நாளாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் தமது நிர் வாக முடக்கப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தமக்கு விதிக்கப்பட்ட தடையையும் மீறி அவர்கள் தமது போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் நேற்று 37ஆவது நாளாகவும் தமிழ் அரசியல் கைதிகள் மூவர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டுவருகின்ற னர். அவர்களுக்கு ஆதரவாகக் கடந்த திங்கட்கிழமை முதல் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக் கழக நிர்வாகத்தை முடக்கிப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

பக்கம் 18

## சர்வதேச உதவியை நாடும் மஹிந்த அணி

### அரசுக்கு எதிராக முறையிடுவதற்கு இவ்வார இறுதியில் சுவிஸ் பயணம்

கொழும்பு, நவ.2

இலங்கை அரசின் செயற்பாடுகள் குறித்து சுவிற்சர்லாந்தில் உள்ள அனைத்துலக நாடாளு மன்ற ஒன்றியம் மற்றும் பங்களாதேஷில் உள்ள பொதுநலவாய நாடாளு மன்றத் தலைமையகம் ஆகியவற்றில் முறையிட வுள்ளதாக மஹிந்த அணி தெரிவித்

பக்கம் 18

## போராட்டம் நியாயமானதே

### சகல தரப்பினரையும் ஆதரவளிக்க கோருகிறது பல்கலை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், நவ.2

அநுராதபுரம் சிறைச் சாலையில் தொடர் உண் ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசி யல் கைதிகளின் கோரிக் கைகளை உடனடியாக நிறைவேற்றக் கோரி – யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பித் துள்ள நியாயமான போராட் டத்துக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரிய சங்கத்தினராகிய நாமும் பூரண ஆதரவை வழங்கு கின்றோம்.

பல்கலைக்கழக மாண

பக்கம் 03

## முன்னாள் போராளிக்கு நேற்று ஆயுள்காலச் சிறை

### கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, நவ.2

கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவருக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

பக்கம் 18

## தேர்தல் வர்த்தமானி அறிவிப்பில் நேற்று அமைச்சர் கைச்சாத்து

பக்கம் 05

## இளைஞரைச் சுட்ட துப்பாக்கி எஸ்.ரி.எவ். முகாமில் சிக்கியது

### அரியாலை இளைஞர் கொலை விசாரணைகளில் புதிய திருப்பம்



யாழ்ப்பாணம், நவ.2

அரியாலை இளைஞரைச் சுட்டுக் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி, மோட்டார் சைக்கிள், ஓட்டோ ஆகியன யாழ்ப்பாணம் பண்ணை யில் அமைந்துள்ள சிறப்பு அதிரடிப் படை (எஸ்.ரி.எவ்) முகாமிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. ஆயினும் சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைதாகவில்லை.

கொழும்பில் இருந்து விசாரணைக் காக வந்த குற்றப்புலனாய்வுப் பிரிவி னரே இவற்றை மீட்டுள்ளனர்.

இதனால் இந்தக் கொலை தொடர் பான விசாரணைகளில் பெரும் திருப் பம் ஏற்படும் என

பக்கம் 18

# இளைஞர்கள் போராட்டத்தை நாடியதற்கு புதிய காரணம் கூறுகிறார் ஆளுநர் குரே

கொழும்பு, நவ. 02

வடக்கில், இளைஞர், யுவதிகளுக்கு ஜீவனோபாய உதவிகளை வழங்காத நிலையிலேயே இளைஞர்கள் பயங்கரவாதத்திற்குள் சென்றார்கள் என வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் குழு ஒன்று நேற்றைய தினம் யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் செய்து வடமாகாண ஆளுநர்றெஜினோல்ட்குரேயை சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

யாழ். பழைய பூங்கா வளாகத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் றிச்சட் கோபெற், அல்றிக் முல்லர் மற்றும் ஜீன் லம்பர்ட் ஆகியோர் ஆளுநருடனான இந்தச் சந்திப்பை மேற்கொண்டுள்ளனர்.

ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற கலந்துரையாடல் இந்த வடமாகாண ஆளுநர் ஊடகங்களுக்கு தொடர்ந்தும் தெரிவித்தவை வருமாறு:-

போருக்குப் பின்னர் வடமாகாணத்தில் அபிவிருத்தி வேலைகள் எவ்வாறு நடைபெற்றுள்ளன. நடைபெற்று வருகின்றது என்பதை ஆராய்வதற்காக அவர்கள் இங்கே வந்திருந்தார்கள்.

மேலும் தமிழ், சிங்கள மக்களிடையில் நல்லிணக்கத்தை எப்படி உருவாக்கலாம்? என்பது தொடர்பாகவும் ஆராய்ந்தார்கள். மேலும் நாம் அவர்களிடம் கூறியது அபிவிருத்தி வேலைகளுக்காக பெரியளவு நிதியை செலவிட வேண்டும் என்று தெரிவித்தோம்.

அதேபோல் இளைஞர்களுக்கு ஜீவனோபாய உதவிகளை வழங்கவேண்டும். கடந்தகாலத்தில் இளைஞர், யுவதிகளுக்கு ஜீவனோபாய உதவிகளை வழங்காத நிலையிலேயே இளைஞர்கள் பயங்கரவாதத்திற்குள் சென்றார்கள் என்பதைக்கூறியிருக்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க)







ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவினருடனானநேற்றைய சந்திப்பின் போது...!



## புதிய கடற்படை தளபதியுடன் பாதுகாப்பு செயலாளர் நேற்று சந்திப்பு!

புதிதாக நியமிக்கப் பட்ட கடற்படைத் தளபதி வைஸ் எட்மிரல் சிரிமேவன் ரணசிங்க பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்னவை சந்தித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. கடற்படையின் 22 ஆவது புதிய தளபதியாக தனது கடமைகளை பொறுப்பெற்ற பின்னர், பாதுகாப்பு செயலாளருடன் முதற்தடவையாக உத்தியோகபூர்வமான சந்திப்பை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த சந்திப்பின்போது, அவர்களிடையே சிநேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், பாதுகாப்புச் செயலாளர் புதிய கடற்படைத் தளபதிக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

## சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன!

கொழும்பு, நவ. 02

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

நாடு முழுவதும் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு இதன்போது கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

சமுர்த்தி உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய பிரச்சினை மற்றும் 2014.01.03 ஆம் திகதி முதல் திணைக்களத்திற்கு புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கேற்ப சம்பளத்தைக் குறைக்காது நிரந்தர நியமனங்களை வழங்குவது தொடர்பாகவும் இதன்போது ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அதற்குரிய அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தரம் உயர்த்தப்படுவதற்கான முறையொன்றினை தயாரித்தல்.



கடந்த வரவு - செலவு திட்டத்தின் மூலம் அரச உத்தியோகத் தர்களின் அடிப்படை சம்பளத்துடன் சேர்க்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொள்ளல் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் 300 ரூபா கொடுப்பனவு மற்றும் 2000 ரூபா பிரயாண செலவினை பெற்றுக்கொள்ளல் போன்ற பல பிரச்சினைகள் இதன்போது முன்வைக்கப்பட்டன.

அந்துடன், நிதி அமைச்சுடன் கலந்துரையாடி இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்த்துக்கொள்ளவும் வினைத் திறனை அதிகரித்துக்கொள்ளவும் சகல சமுர்த்தி வங்கி களையும் கணினிமயப்படுத்தி நவீனப்படுத்துவது தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க, அமைச்சின் செயலாளர் டபிள்யு. ஜே.பி.எஸ்.வீரக்கோன், நிதி அமைச்சின் செயலாளர் ஆர். எச்.எஸ்.சமரதுங்க மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## அபிலாஷை - புகைப்படக் கண்காட்சி ஆரம்பம்!

கொழும்பு, நவ. 02

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகமும் ஐரோப்பிய யூனியனும் இணைந்து நாடளாவிய ரீதியில் தேசிய ஐக்கியம் பற்றிய புகைப்படப் போட்டி ஒன்றை நடத்தியது.

அதில் தெரிவு செய்யப்பட்ட புகைப்படங்கள் அடங்கிய 'அபிலாஷை - புகைப்படக் கண்காட்சி' நேற்றுமுன்தினம் சுதந்திர சதுக்கத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் ஐரோப்பிய யூனியனின் தூது வர் டங்லை மார்கு ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில், புகைப்படப் போட்டியில் வெற்றிபெற்ற புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்தினவும் இதில் கலந்து கொண்டார்.

இந்தப் புகைப்படக் கண்காட்சி இன்றைய தினமும் சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

# அரசியல் கைதிகளின் மனு அடுத்த வாரம் வரை தாமதம்

கொழும்பு, நவ.2

தமது வழக்குகளை மீண்டும் வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு கோரி அநுராதபுரம் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் 3 தமிழ் அரசியல் கைதிகளின் மீளாய்வு மனு அடுத்த வாரமே கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுவை நேற்று நீதிமன்றத்தில் எடுக்கக் கோரும் நகர்த்தல் பத்திரம் ஒன்றை அந்தக் கைதிகளின் சார்பில் மீளாய்வு மனுவைத் தாக்கல் செய்த சட்டத்தரணி நீதிமன்றில் ஒப்படைத்திருந்தார்.

இந்த மீளாய்வு மனு கடந்த திங்கள்கிழமை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது அது தொடர்பில் எவரும் முன்னிலையாகவில்லை. இதனால் அந்த மனுவை நீதிமன்றம் கையாளாமல் விட்டது.

இந்த நிலையில் புதிய நகர்த்தல் விண்ணப்பம் நேற்று முன்தினம் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, அதனை நேற்று எடுத்துக் கொள்ளுமாறு சட்டத்தரணி கோரியிருந்தார்.

ஆயினும் நேற்றும் அது நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. எதிர்வரும் 9 ஆம் திகதி வரை அதற்கு வாய்ப்பில்லை என்பதால் அடுத்த வாரமே அது நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படும் என சட்டத்தரணிக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது.

## அரச நத்தார் விழா திருகோணமலையில்



கொழும்பு, நவ.2

அரச நத்தார் விழா இம்முறை திருகோணமலையில் நடைபெறவுள்ளது. அரச தகவல் திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

அன்பின் ஊற்று நத்தார் பண்டிகையாகும் என்ற தொனிப் பொருளில் இம்முறை அரச நத்தார் விழா நடைபெறவுள்ளது. திருகோணமலை மறை மாவட்டத்தில் இந்த நிகழ்வை நடத்துவதற்கு அமைச்சரவை இணங்கியுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மதுபோதையில் வாகனத்தை செலுத்திய பூசகருக்குச் சிறை

எந்தவித ஆவணங்களுமின்றி மதுபோதையில் மோட்டார்ச் சைக்கிள் செலுத்திய யாழ். ஊர்காவற்துறையைச் சேர்ந்த ஆலயப் பூசகர் ஒருவரை நீதிவான் கடுமையாக எச்சரித்ததுடன் 18 ஆயிரம் ரூபா அபராதமும், ஒரு மாதச் சிறைத்தண்டனையும் விதித்தார்.

இது தொடர்பான வழக்கு நேற்று ஊர்காவற்துறை நீதிவான் ஏ.எம்.றியாஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டார்.

குறித்த ஆலயப் பூசகர் மது போதையில் மோட்டார்ச்சைக்கிள் செலுத்திய குற்றச்சாட்டில் ஊர்காவற்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் எந்தவித ஆவணங்களுமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியமை தெரியவந்தது.

நேற்று ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.எம்.றியாஸ் முன்னிலையில் குறித்த பூசகர் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது சமூகத்தில் முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டிய மதகுருமார்கள் மதுபோதையில் வாகனம் செலுத்தலாமா? என ஆலயப்பூசகரிடம் கேள்வியெழுப்பிய நீதிவான் கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன் 18 ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு மாதச் சிறைத்தண்டனையும் விதித்தார்.

## ரத்துபஸ்வல வழக்கு ஜன. 24 விசாரணைக்கு

கொழும்பு, நவ.2

கம்பஹா, ரத்துபஸ்வல பகுதியில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பான வழக்கை எதிர்வரும் ஜனவரி 24 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்குமாறு கம்பஹா நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இராணுவ பிரிகேடியர் அனுர தேசப்பிரிய உள்ளிட்ட 4 இராணுவத்தினருக்கு எதிரான வழக்கே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி ரத்துபஸ்வல பிரதேச மக்கள் சுத்தமான குடிதண்ணீர் வேண்டி நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்துக்குள் கொண்டுவர இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் பாடசாலை மாணவர்கள் இருவர் உட்பட மூவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் உயர்மட்டக் குழு ஜனாதிபதியுடன் சந்திப்பு



கொழும்பு, நவ.2

இலங்கையில் ஜப்பான் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஜப்பான் உயர்மட்டத் தூதுக்குழுவொன்று ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியது.

ஜப்பான் இலங்கைக்கு உண்மையான நண்பனாக தொடர்ச்சியாக உதவி வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது குறிப்பிட்டார்.

இலங்கையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஜப்பான் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் எனத் தூதுக்குழுவின் தலைவர் சர்வதேச கூட்டுறவு பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் உதவி அமைச்சர் கசுஜா நசிடா ஜனாதிபதியிடம் உறுதியளித்தார். ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொள்ளுமாறு கோரும் ஜப்பான் பிரதமர் சின்சோ அபேயின் அழைப்பையும் அவர் ஜனாதியிடம் வழங்கினார்.

# கடற்படை அதிகாரியின் விளக்கமறியல் நீடிப்பு



11 இளைஞர்கள் கடத்திக் காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பீ தஸநாயக்கவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அவரை எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2008 மற்றும் 2009ஆம் ஆண்டு காலப் பகுதியில் 11 இளைஞர்கள் கடத்திக் காணாமல்போகச் செய்யப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. தெஹிவளை, பத்தரமுல்லை மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கடத்திக் காணாமற்போகச் செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் 12ஆம் திகதி கடற்படையின் முன்னாள் பேச்சாளர் தஸநாயக்கவைப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்திருந்தனர். தஸநாயக்கவுடன் மேலும் ஐந்து பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போராட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களின் இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் பொது அமைப்புக்கள், பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் என அனைத்துத்தரப்பினரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்.

– இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் “அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான போராட்டங்களும் பல்கலைக்கழக சமூகத்தினரது நிலைப்பாடும்” என்ற தலைப்பில் சங்கத்தின் தலைவரும் செயலாளரும் ஒப்பமிட்டு ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தமிழ் மக்களது உரிமைப் போராட்டங்களிலும், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான விடயங்களிலும் நெடுங்காலமாகவே கரிசனை கொண்டு வந்துள்ளது. தற்போது அரசியல் கைதிகள் தொடர்பாக எழுந்துள்ள போராட்டங்களிலும் குறிப்பாக பொது அமைப்புக்களுடன் இணைந்து ஒருமித்த கருத்துடன் செயற்பட்டுவருகின்றது. அரசியல் கைதிகள் துரிதகதியில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திற்கு எந்தவிதமான மாற்றுக்கருத்துக்களும் கிடையாது.

இந்தப் பிரச்சினை அரசியல் நடைமுறைகளின் ஊடாக தீர்த்து வைக்கப்படவேண்டும். அதற்கான சகல முயற்சிகளும் விரைந்து எடுக்கப்பட வேண்டும். அதற்காக தமிழ் அரசியல் தலைமைகள் இதுவரையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் திருப்தி தருவனவாக அமையவில்லை. இதன் பொருட்டு பொதுமக்களும், பொது அமைப்புக்களும், மாணவர்களும் ஓர் அணியாகத் திரண்டு அரசியல் ரீதியாக இவ்விடயம் தீர்க்கப்படுவதற்கு தமிழ் நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்கும் தமிழ்த் தலைமைகளுக்கும் அழுத்தம் கொடுக்கவேண்டியுள்ளது.

இந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சங்கம் பொது அமைப்புக்களால் கோரப்பட்ட கடையடைப்பு மற்றும் ஹர்த்தாலின் பின்னர் அரசியல் கைதிகளின் விடயத்தில் கரிசனை கொண்டு ஜனாதிபதியைத் தாங்களாகவே சந்தித்திருந்தனர். அதன்பின்னர் வகுப்புக்களையும் பகிஷ்கரித்திருந்தனர். சந்திப்பின் போது ஜனாதிபதியால் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதைக் காரணங்காட்டி, பல்கலைக்கழக நிர்வாக முடக்கப் போராட்டத்தை கடந்த திங்கட்கிழமை முதல் எந்த வித முன்னறிவித்தலும் இன்றி ஆரம்பித்திருந்தனர்.

மாணவர்களது இந்த நிர்வாக முடக்கப்போராட்டம் என்பது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலை பூட்டி நடத்தப்பட்டமையால் இதில் இருந்த சட்டப் பிரச்சினை தொடர்பாக ஆசிரியர் சங்கம் மாணவர்களின் பாதுகாப்புக் கருதி கரிசனையுடன் ஆலோசனைகளை வழங்கியிருந்தது. இந்த விடயத்தில் ஆசிரியர்கள் என்ற வகையில் நாம் மிகவும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டியிருந்தது.

அதேவேளையில் மாணவர்களின் நியாயபூர்வமானதும் அரசியல் கைதிகள் சம்பந்தமானதுமான அவசர கோரிக்கைகள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தவேண்டியும் ஆதரவு வழங்க வேண்டியும் இருந்தது. மாணவர்களினால் கோரப்பட்ட உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கைகள் தீர்க்கப்பட்டால் பல்கலைக்கழகத்தில் இயல்புநிலை தோன்றும் என்பது யதார்த்தமாகும்.

அதாவது –

⋆ அனுராதபுரம் சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் மூன்று அரசியல் கைதிகளின் வழக்குகளை மீள வவுனியா நீதிமன்றத்திற்கு மாற்றப்படவேண்டும் என்பதுடன் அவர்களது நீண்டநாள் உண்ணாவிரதப் போராட்டத்தை 'நிறுத்துதல்' மற்றும் –

⋆ சிறையில் இருக்கும் அக் கைதிகள் சிறைச்சாலையில் தனியானஒரு பகுதியில் (கொலை, கொள்ளை, வன்புணர்வு போதைப் பொருள் கடத்தல் தொடர்புடைய கைதிகளுடன் தங்கவைக்கக் கூடாது) தங்கவைக்கப்பட வேண்டும்.

இவ்விரு அவசர கோரிக்கைகளும் சாதாரணமாக தீர்க்கப்படக் கூடியவையே என்று ஆசிரியர் சங்கம் கருதுகின்றது. இவ்விரு கோரிக்கைகளையும் நிறைவேற்றும்படி நாம் சம்பந்தப்பட்ட தரப்பினரை வலியுறுத்துகின்றோம். அத்துடன் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டிய –

⋆ சிறையில் இருக்கும் அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் விசாரணைக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

⋆ ஏற்கனவே பல வருடமாகச் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ஏனைய அரசியல் கைதிகள் அரசியல் தீர்மானத்தினூடாக நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும். மற்றும்

⋆ வடகிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு சிறந்த வாழ்வாதாரம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்

– போன்ற கோரிக்கைகளை விரைந்து தீர்க்க நாம் வலியுறுத்துகின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சார்பாக இக் கோரிக்கைகள் அடங்கிய விடயங்களை உள்ளடக்கி ஜனாதிபதி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றி பல்கலைக்கழகத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு வலியுறுத்தி கடிதம் ஒன்று அனுப்புவதற்கும் ஆசிரியர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

– என்றுள்ளது. (இ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மதம் பிடித்த சிந்தனையே நியாயத் தீர்வுக்குத் தடை

சமஷ்டி என்றால் தெற்குக்கு வேம்பாகக் கசக்கின்றது. சமஷ்டி முறைமையை வழங்கினால் நாடு பிரிந்து விடும் எனக் கூக்குரலிடுகிறது தென்னிலங்கை.

ஆனால், நாட்டை ஐக்கியப்படுத்துவதுதான் சமஷ்டி என்பதே உண்மை. அதனைத் தமிழர் தரப்பு எப்படி எடுத்துரைத்தும் தென்னிலங்கை நம்புவதாக இல்லை; புரிந்து கொள்வதாக இல்லை.

தென்னிலங்கை சிங்கள, பௌத்த மக்களின் அடிமனதில் சமஷ்டி என்றால் பிரிவினை என்ற பொய்மையை விஷ வித்தாக விதைத்திருக்கின்றது பேரினவாதம். அதிலிருந்து மீளமுடியாமல் அந்தப் பொய்மை வாதத்தில் மூழ்கிக் கிடக்கின்றது சிங்களம்.

மெய்ம்மையைத் திரிவுபடுத்தி, பொய்மையை மெய்ம்மையாகக் காட்டும் சூட்சுமமான கலையை - வித்தையை பௌத்த மத பீடத்தினரும், பேரினவாத அரசியல்வாதிகளும் நுண்மையாக முன்னெடுத்திருக்கின்றார்கள்; நுணுக்கமாகக் கையாண்டிருக்கின்றார்கள்.

சமஷ்டி என்றால் பிரிவினை என்ற கருத்துத் திணிப்பு தந்திரமாக - நுட்பமாக - மதியூகமாக - சிங்கள மக்களின் ஆழ்மனதில் பதியும் விதத்தில் - வனையப்பட்டிருக்கின்றமைதான், இலங்கை இனப்பிரச்சினைக்கு நீதியான - நியாயமான - சமத்துவமான - ஒரு தீர்வைத் தமிழ் மக்கள் பெறுவதற்குக் கேடாகவும் பாதிப்பாகவும், பின்னடைவாகவும் வந்து சேர்த்துள்ளது.

சமஷ்டி முறை குறித்து இந்த நாட்டில் முதன் முதலில் பிரஸ்தாபித்தவர்கள் - அதை வற்புறுத்தியவர்கள் - தமிழர்கள் அல்லர். சிங்களத் தலைவர்கள்தான் அதனை முதலில் வலியுறுத்தினர்.

இன்று சமஷ்டியை எதிர்க்கும் மஹிந்த ராஜபக்ஷ அணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிதா மகர்களின் வழித்தோன்றல் தாம் என்று கூறுகின்றது.

சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவுடன் சேர்த்து அந்தக் கட்சியைத் தோற்றுவித்தவர் தமது தந்தை ராஜபக்ஷ என்கிறார் மஹிந்தர். அது உண்மைதான்.

ஆனால், அந்த சுதந்திரக் கட்சியைப் ஸ்தாபித்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காதான் இலங்கைக்கு சமஷ்டி முறை அவசியம் என்று வற்புறுத்தியவர்.

1926 ஆம் ஆண்டில் இலங்கை ஐக்கியப்பட்டிருப்பதற்கு ஒரே வழி சமஷ்டி முறைதான் என்று 'த மோர்னிங் ஸ்ரார்' பத்திரிகையில் 6 கடிதங்களை எழுதியவர் அவர். அதற்காக பிரசாரம் செய்தவரும் அவர்தான்.

முப்பதுகளில் யாழ்ப்பாணத்துக்கும் சென்று பகிரங்கக் கூட்டங்களை நடத்தித் தமது சமஷ்டி யோசனைக்குத் தமிழ் மக்களின் ஆதரவைக் கோரியவரும் அவரே.

ஆனால், அப்போது தமிழர்கள் அந்த யோசனைக்கு எடுபடவில்லை. சகோதரர்களாகிய சிங்களவர்கள் மீது அதீத நம்பிக்கை வைத்திருந்த யாழ்ப்பாணத்து மக்கள், சமஷ்டி முறைக் கோரிக்கையை அப்போது முன்வைக்க முன்வரவில்லை.

1930 களில் கண்டியத் தலைவர்களும் டொனமூர் ஆணைக்குழுவுக்கு முன்னால் வைத்த பரிந்துரையில் இந்த நாட்டை மூன்று கட்டமைப்புகள் கொண்ட சமஷ்டியாகப் பிரிக்கக் கோரியிருந்தனர். அந்த மூன்று கட்டமைப்புகளில் ஒன்று வடக்கும், கிழக்கும் இணைந்த அலகாகும்.

ஆக, வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டி அலகு என்ற கோரிக்கை தமிழர்களால் முதன் முதலில் முன்வைக்கப்பட்டதல்ல.

இன்று பேரினவாத எழுச்சியின் உச்சியில் நின்றபடி சமஷ்டியை எதிர்க்கும் தரப்பின் 'அரசியல் ஞானத் தந்தையான' எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவாலும், கண்டியத் தலைவர்களாலும் அடையாளம் காணப்பட்டு முன்வைக்கப்பட்டதே அது.

பின்னர் 1940 களில் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டுக்கு பீற்றர்கெனமன் - வைத்திலிங்கம் குழு முன்வைத்த பரிந்துரையிலும் கூட இந்த சமஷ்டி யோசனைதான் பிரதானமாக அமைந்தது.

ஆக, பிரிவினைவாத நோக்கோடு முன்வைக்கப்பட்டதல்ல சமஷ்டி என்பது தெளிவு.

அதுவும் 'பிளவுபடாத, பிரிக்க முடியாத ஐக்கிய' இலங்கைக்குள் தீர்வு என்று தமிழர் தரப்பு திரும்பத் திரும்பக் கூறும்போது, தமிழர்களுக்கு நியாயமாக எதைக் கொடுத்தாலும் அது பிரிவினை என பேரினவாதிகள் அடையாளப்படுத்த முயல்வதும் -

தமிழர்களுக்கு நியாயம் ஏதும் செய்து விடக் கூடாது - அவர்களுக்குரிய நியாயமான ஆட்சி அதிகாரத்தை அவர்களுக்குப் பகிர்ந்து விடக் கூடாது - என்றெல்லாம் தென்னிலங்கை ஒற்றைக் காலிக் நிற்பதற்கு ஒரேயொரு காரணம்தான் உண்டு.

அது, பேரினவாதத் திமிர்; மேலாண்மை வாதச் செருக்கு. பெரும்பான்மையினர் என்ற தடிப்பு.

மாற்று இனத்தவரையும், மாற்று மொழியினரையும், மாற்று மதத் தவரையும் என்றும் இந்த நாட்டில் சிங்கள, பௌத்தர்களுக்கு அடிமையானவர்களாகச் சித்திரித்துக் காட்டும் மனோபாவத்தில் எழுந்ததே இந்தப் பண்பியல்பு.

இந்தக் கீழ்த்தரமான பண்பியல்புகளில் இருந்து தென்னிலங்கையை மீள விடாது அமிழ்த்தி கட்டி வைத்திருப்பதில் பௌத்த மத பீடங்களுக்குக் கணிசமான பங்குண்டு.

இந்தப் போக்கு மத சிந்தனையால் எழுந்ததல்ல. மதம் பிடித்த சிந்தனையால் எழுந்தது என்பதே உண்மை.

# பாரவூர்தி சாரதியை கொலை செய்த குற்றத்திற்காக 3 பேருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் மரணதண்டனை!

வாடகைக்கு அமர்த்திச் சென்ற பாரவூர்தி சாரதியான மொஹமட் மிஹால்துவன் ஏக்கீன் என்பவரை வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வைத்து கொலை செய்த குற்றத்திற்காக மூன்று பேருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் புத்தளம் பகுதியில் இருந்து மன்னார் நோக்கி பாரவூர்தி ஒன்றை மூவர் வாடகைக்கு அமர்த்திச் சென்றுள்ளனர்.

இந்த பாரவூர்தி வவுனியா, செட்டிகுளம், கப்பாச்சி பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது பாரவூர்தி சாரதியை தாக்கி கொலை செய்துவிட்டு அதில் பயணித்த மூவரும் தப்பியிருந்தனர்.

இந்த நிலையில், இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட செட்டிகுளம் பொலிஸார் இந்த பாரவூர்தியை வாடகைக்கு அமர்த்திச் சென்ற செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த வீரய்யா ரவீந்திரஜோதி, நேசராசா (ராஜி), குமார் ஆகிய மூவர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதுடன் முதலாம் எதிரியான வீரய்யா ரவீந்திர ஜோதி என்பவரைக் கைது செய்தனர்.

ஏனைய இரண்டாம் எதிரியான நேசராசா, மூன்றாம் எதிரியான குமார் ஆகிய இருவரும் தலைமறைவாகியிருந்தனர்.

இந்த வழக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றில் பூர்வாங்க வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் மூன்று சந்தேகநபர்களுக்கு எதிராகவும் 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் திகதி சட்டமா அதிபரால் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப் பகர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது இந்த வழக்கின் 2 ஆம், 3 ஆம் எதிரிகள் தலைமறைவாகியிருந்தமையால் அவர்கள் இன்றியே விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. இந்நிலையில் வழக்கு மீதான விளக்கங்கள், சாட்சிப் பதிவுகள் நிறைவடைந்த நிலையில் நேற்றைய தினம் வழக்கு தீர்ப்புக்காக வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிம கேந்திரனால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இந்த மூன்று சந்தேகநபர்களும் கொலையை விளைவித்த சம்பவத்திற்காக வவுனியா மேல் நீதிமன்றினால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு அவர்கள் மூவருக்கும் மரணதண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இதேவேளை, இரண்டாம், மூன்றாம் சந்தேக நபர்களுக்கு எதிராக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வழக்கு தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி செல்வி மாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தியிருந்தார். (க-100)

# அனைத்து ஒசுசல மருந்தகங்களிலும் இலவச மருந்துகள் விநியோகிக்கவும்!

கொழும்பு, நவ. 02

அரச மருந்தாளர்கள் சங்கம் நேற்று அடையாள பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர்.

இதனால், நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதைத் தடுக்கும் முகமாக அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அனைத்து ஒசுசல மருந்தகங்களிலும் இலவசமாக மருந்துகளை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும், அரச வைத்திய சாலைகளின் உள் மற்றும் வெளி நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்து சீட்டுகளுக்கு இவ்வாறு மருந்துகள் வழங்கப்பட உள்ளன என அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் நிர்வாக இயக்குனர் தெரிவித்துள்ளார்.

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்னவின் பணிப்பின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

மருந்தாளர்களுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஊடாக நடத்தப்படும் மருத்துவ மற்றும் மருந்தாளர்களுக்கான பட்டப்படிப்பை நிறுத்தியமை, இந்த பணிப் பகிஷ்கரிப்பிற்கு காரணமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய அரசமைப்பை எதிர்ப்பவர்கள் தேசத்துரோகிகள் என்கிறார் ராஜித

## பௌத்த பிக்குகளையும் சாடுகிறார் அவர்

யாழ்ப்பாணம், நவ. 01

இலங்கை வரலாற்றில் புதிய அரசமைப்பு முயற்சிகளின் போது, பௌத்த பிக்குமார் முறையற்ற விதத்தில் தலையீடுகளை மேற் கொண்டுள்ளனர் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதிய அரசமைப்பை எதிர்ப்பவர்கள் தேசத் துரோகிகள் எனவும் அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

அரசமைப்பு நடவடிக்கை குழுவின் அறிக்கை மீதான விவாதம் நாடாளுமன்றில் நடைபெற்றுள்ளது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடுபிளவுபடுவதைதடுக்க பல விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால் சிலர் தமது அரசியல் நன்மைக் காக நாட்டைபிளவுபடுத்தும் அரசமைப்பு உருவாக்கப்படுகிறது என உண்மைக்குப்புறம் பான பிரசாரத்தை மேற்கொள்கிறனர்.

மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன மக்கள் வழங்கிய பெரும்பான்மை பலத்தை பயன்படுத்தி நிறைவேற்று ஜனாதிபதி முறையைக் கொண்டு வந்ததார்.

அதற்குப் பின்னால் ஆட்சியமைத்த அரச தலைவர்கள் அதனை முற்றாக ஒழிப்பதாக வாக்குறுதி வழங்கிய போதிலும், அதனை நிறைவேற்றவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# எரிபொருள் விலை விரைவில் குறையும்

எதிர்வரும் வாரங்களில் டீசல் மற்றும் பெற்றோலின் விலைகளை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற ஆய்வுக் குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட பின்னர் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தற்போதுள்ள எரிபொருள்களின் விலை கடந்த 2015 ஆம் ஆண்டு புதிய அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் கடைசியாகக் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நாளை

03.11.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : அச்சுவினி பி.இ 4.27 வரை
திதி : சதுர்த்தசி பி.ப 1.26 வரை
சுபநேரம் : 6.04 – 7.34 வரை
இராகுகாலம்: 10.34 – 12.04 வரை

# இன விரிசலை ஏற்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

## மட்டு. பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜாகொட ஆராச்சி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 02

அச்சமின்றி வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கையில் ஈடுபட முடியும். இன விரிசலை ஏற்படுத்த முற்படுபவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஜாகொட ஆராச்சி தெரிவித்துள்ளார்.

கிரான் மற்றும் செங்கலடி போன்ற பிரதேசங்களிலுள்ள சந்தைகளில் ஏற்பட்ட அசாதாரண நிலை தொடர்பாக ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் நடை பெற்றபோது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் மற்றும் ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் மௌலவி எம்.எல்.எம்.வாஜித் உட்பட சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஏறாவூர் பள்ளிவாசல் சம்மேளன பிரதிநிதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், ஊர் பிரமுகர்கள், புத்திஜீவிகள் உள்ளிட்ட பலர்இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதன் போது மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜாகொட ஆராச்சி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனங்களிடையே விரிசல்களை ஏற்படுத்த முனையும் விஷமிகளைவிரைவில் அடையாளங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த இன முறுகலை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்தவர்கள் மற்றும் அதற்கு தூண்டியவர்களை நாம் அடையாளம் கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி கடும் சட்ட நடவடிக்கை எடுப்போம்.

முஸ்லிம் வியாபாரிகள் அச்சமில்லாமல் தொடர்ந்து தமது வழமையான செயற்பாட்டில் ஈடுபட முடியும். தேவையான அனைத்து பாதுகாப்பு ஒழுங்குகளையும் நாம் செய்துள்ளோம்.

இந்தப் பிரச்சினை சிலரின் தனிப்பட்ட அரசியல் சுய லாபங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளவையாகும். இதனால், தமிழ் மற்றும் முஸ்லிம் அப்பாவி மக்களும் வர்த்தகர்களுமே பாதிக்கப்ப டுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் போது கிரான் சந்தையில் முஸ்லிம் வியாபாரிகளுக்கு வியாபாரம் செய்வதற்கு எதிராக சில விஷமிகளால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் வாழைச்சேனை ஓட்டோ தரிப்பிடம் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் இதன் போது மக்களால் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இங்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் தெரிவித்தவை வருமாறு:-

இவ்வாறான பிரச்சினைகளை இனப்பிரச்சினையாக உருவெடுக்க ஒருபோதும் இடமளிக்கக் கூடாது .

அத்துடன், தமிழ் முஸ்லிம் சமூகங்கள் இவ்வாறான நேரத்தில் மிகவும் சுமுகமான முறையில் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். ஒரு சில சதிகாரர்களின் துர்நோக்கங்கள் நிறைவேறுவதற்கு நாம் காரணமாக இருந்து விடக்கூடாது.

பல இடங்களில் முஸ்லிம் வர்த்தகங்களுக்கு எதிராக தடைவிதிக்கும் வகையில் வன்முறைகளிலும் சிலர் ஈடுபட்டு வருவதைத் தடுக்கும் வகையில் பொலிஸார் மாவட்ட மட்டத்தில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



## ஊடகவியலாளர் சமனின் இரு நூல்கள் வெளியீடு!

கொழும்பு, நவ. 02

சொந்துறு செறிசற – சக்வல பியச திகே மற்றும் மலக் வுனே ஹய் நும்ம மட்ட என்ற இரு நூல்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வெளியிடப்பட்டுள்ளன.

சிரேஷ்ட ஊடகவியலாளரும் பிரதமர் அலுவலக மேலதிக செயலாளருமான சமன் அத்தாவுடஹெற்றியினால் எழுதப்பட்ட இந்த நூலின் வெளியீட்டு நிகழ்வு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதமர் மற்றும் நூலாசிரியர் சமன் அத்தாவுடஹெற்றியும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

## ஜனாதிபதி மைத்திரியுடன் கட்டார் அமைச்சர் சந்திப்பு!

கொழும்பு, நவ. 02

இலங்கை விஜயம் செய்துள்ள கட்டார் பொருளாதார, வர்த்தக அலுவல்கள் அமைச்சர் ஷெய்க் அஹமட் பின் யசீம் அல்தானி மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கட்டார் - இலங்கை ஒன்றிணைந்த பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்வ தற்காக வருகை தந்துள்ள கட்டார் பொருளாதார, வர்த்தக அலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதியை கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்தார்.



## போதைப்பொருளுடன் பாக். தம்பதியர் கைது!

3 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த இருவரும் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த தம்பதிகளென அதிகாரிகள் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 3 கோடி ரூபா பெறுமதியான 2.7 கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருள் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.

## வர்த்தமானியில் கைச்சாத்திட்டார் அமைச்சர் பைஸர் முஸ்தபா!



கொழும்பு, நவ. 02

புதிய தேர்தல் முறையூடாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் நேற்று முன்னர் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா கைச்சாத்திட்டார்.

அந்த வர்த்தமானி அறிவித்தலில், ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கை வெளியிடப்படவுள்ளன.

அத்துடன், இழுபறி நிலை யிலிருந்த அம்பகமுவ மற்றும் நுவரெலியா உள்ளூராட்சி மன்றங்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது.

எனவே, அந்த உள்ளூராட்சி மன்றங்களை தலா மூன்று உள்ளூராட்சி மன்றங்களாகப் பிரித்துள்ளதுடன் அதுவும் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளது.

## நீதிமன்றத்தின் தடை உத்தரவை அடுத்து

# சாய்ந்தமருது வீதி மறியல் போராட்டம் வாபஸ் பெற்று தொடர்கிறது ஹர்த்தால்

சாய்ந்தமருதில் நீதிமன்றத் தின் தடையுத்தரவையடுத்து வீதி மறியல் போராட்டம் விலக் கிக் கொள்ளப்பட்ட போதும், ஹர்த்தால் தொடரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாய்ந்தமருதுக்கான தனியான பிரதேச சபையைக் கோரி நடத் தப்பட்டு வருகின்ற ஹர்த்தால் போராட்டம் நேற்று முன்தினம் வீதிமறியல் போராட்டமாக உருவெடுத்திருந்தது.

அதனை விலக்கிக்கொள் ளுமாறு அங்கு வந்த பொலிஸ் உயரதிகாரிகள் வேண்டுகோள் விடுத்திருந்த போதிலும் ஆர்ப் பாட்டக்காரர்கள் அதற்கு இணங்கவில்லை.

அதனால் பொலிஸார் நீதி மன்றத்தில் தடையுத்தரவைப் பெற்று அதனைப் பள்ளிவாசல் நிர்வாகத்திடம் கொடுத்தனர். அதன்பின்னர் நேற்றுமுன் தினம் இரவு வீதிமறியல் போராட்டம் விலக்கிக்கொள்ளப் பட்டது. இருப்பினும் நேற்று அங்கு ஹர்த்தால் கடைய டைப்புப் போராட்டம் தொடர்ந் தது. ஆனால் ஹர்த்தால் போராட் டம் புதுவடிவம் பெறலாம் என வும் தெரிவிக்கப்படுகிறது.

சாய்ந்தமருது பிரதேசத் திற்கான தனியான உள்ளூ ராட்சி மன்றத்தை உடனடியாக








வர்த்தமானியில் பிரகடனம் செய்யுமாறு வலியுறுத்தி மூன் றாவது நாளாக பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் கல்முனை மாநகர சபையிலிருந்து சாய்ந்த மருதைத் தனியாகப் பிரிக்கக் கூடாது எனக்கோரி கல்முனை முஸ்லிம் பிரதேசத்திலும் ஹர்த்தால்அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக இப்பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள், கடைகள் மற்றும் பொதுச் சந்தைகள் எவையும் திறக்கப்படவில்லை. அரச நிறு வனங்கள், பாடசாலைகள், அரச, தனியார் வங்கிகள் எவை யும் இயங்கவில்லை. இதனால் பொதுப் போக்குவரத்து சேவைகள் முற்றாக ஸ்தம்பித் திருந்தன.

சாய்ந்தமருது நகரம் எங்கும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட் டுள்ளன அத்துடன், பல்வேறு கோஷங்கள் அடங்கிய பதாதை களும் தொங்கவிடப்பட்டுள் ளன.

சாய்ந்தமருது பெரிய பள்ளி வாசலுக்கு முன்னால் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான சத் தியாக்கிரகப் போராட்டமும் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதான வீதியெங்கும் பெரு மளவு பொலிஸார் குவிக்கப் பட்டு, பாதுகாப்பு நடவடிக் கைகள்தீவிரப்படுத்தப்பட்டிருக் கின்றன. (ப)

## மட்டு. பிரதேச செயலாளர்கள் உடனடியாக இடமாற்றம்

மட்டக்களப்பு மாவட்டத் தில் உள்ள பிரதேச செயல கங்களில் ஐந்து வருடங்கள் கடமையாற்றிய பிரதேச செய லாளர்களுக்கு உடன் அமு லுக்கு வரும் வகையில் இட மாற்றங்கள் வழங்கப்பட்டுள் ளன.

மட்டக்களப்பு மாவட்டத் தில் ஒரே பிரதேச செயலகத் தில் ஐந்து ஆண்டுகளை பூர்த்தி செய்த பிரதேச செய லாளர்கள் அனைவரையும் பொதுச் சேவை ஆணைக் குழுவின்அனுமதிக்குஅமைய உள்நாட்டலுவல்கள்அமைச்சு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறித்த இட மாற்றங்களை நடை முறைப் படுத்தியுள்ளது எனத் தெரி விக்கப்படுகின்றது.

இதேவேளை, நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நியமனத்திற்கான நேர்முகத் தேர்வு கொழும்பில் நடை பெற்றது. மட்டக்களப்பு மாவட் டத்திற்கான புதிய அரசாங்க அதிபரை நியமிப்பதில் உள் நாட்டலுவல்கள் அமைச் சின் செயலாளர் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.




## ‘போதையற்ற நாடு’ விளக்கமளிக்கும் செயலமர்வு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ‘‘ போதையற்ற நாடு ’’ எனும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூதூர் பிரதேச இளைஞர்களுக்கு போதைவஸ்து பாவனையால் ஏற்படும் விபரீதங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் செயலமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மூதூர் பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மூதூர் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி எம்.டி.முபாரிஸ் தலைமையில், மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இச் செயலமர்வு இடம்பெற்றது.

இதன் போது வளவாளர்களாக தேசிய இளைஞர் சேவை கள் மன்றத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் சாந்த அபேகுணவர்த்தன, மூதூர் உதவி பிரதேச செயலாளர் ஏ.தாஹீர், மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல். எம்.ஹாசீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், போதை வஸ்துப் பாவனையால் இளைஞர்கள் பாதிப்புக்குள்ளாகின்ற விதம், போதை வஸ்து பாவனையில் இருந்து இளைஞர்கள் விடுபடுவதற்கான வழிமுறைகள் தொடர்பான விளக்கங்கள் இதன்போது வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப)

## கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கமநல அபி விருத்தித் திணைக்களத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

மகாஜனாக் கல்லூரி மண்டபத்தில் மட்டு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளர் நடராஜா சிவலிங்கம் தலைமையில் சிறுவர் சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள், பணப் பரிசுகள் மற்றும் பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நடை பெற்றது.

ஜனாதிபதியின் உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக 17 கமநல சேவைகள் நிலைய மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற வர்களுக்கு பரிசில் வழங்கப்பட்டது.



இந்த நிகழ்வில் மாவட்ட கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள், கமநல அபிவிருத்தித் திணைக்கள உயர் அதிகாரிகள், பாடசாலை உதவி அதிபர், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (ப)

# கொழும்பில் இருந்து புறப்பட்டது அமெரிக்க போர்க் கப்பல்களின் அணி!







கொழும்பு, நவ. 02

நான்கு நாள்கள் பயணமாக, கொழும்புத் துறைமுகத்துக்கு வந்திருந்த அமெரிக் கடற் படையின், நிமிட்ஸ் விமானந் தாங்கி தாக்குதல் அணி, நேற்று முன்தினம்புறப்பட்டுச்சென்றது.

யு.எஸ்.எஸ். நிமிட்ஸ் விமானந்தாங்கி கப்பல் தலைமையில்,அதிவேகப்போர்க்கப்பலான யு.எஸ்.எஸ். பிரின் சிரோன், நாசகாரிக் கப்பல்களான, யு.எஸ். எஸ். ஹவார்ட், யு.எஸ்.எஸ். சூப், யு.எஸ்.எஸ். பின்க்னி, யு.எஸ். எஸ். கிட் ஆகியன கடந்த 28 ஆம்திகதிகொழும்புதுறைமுகத்துக்கு வந்திருந்தன. கொழும்பில் அமெரிக்கப் போர்க் கப்பல்கள்தரித்திருந்தபோது,அமெரிக்ககடற்படையினர்பல்வேறு நிகழ்வுகளிலும், விளையாட்டு களிலும் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் இந்தப் போர்க்கப்பல்களின் அணி, இலங்கை கடற்படையினரின் பாரம்பரிய, வழியனுப்பு நிகழ்வுகளுக்குப் பின்னர், கொழும்புத் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றது.

முன்னதாக, 11 ஆவது விமானந்தாங்கி தாக்குதல் அணியின் தளபதியான றியர் அட்மிரல் கிரெகரி ஹரிஸ், கடந்த திங்கட்கிழமை இலங்கைக் கடற்படைத் தலைமையகத்துக்குச் சென்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் தொடர்ந்தும் கடுமையான மழை!



கொழும்பு, நவ. 02

இலங்கையில் பெரும் பாலான பகுதிகளில் 150 மி.மீ இறக்கும் அதிகமான கன மழை எதிர்பார் கப்படுகிறது என வளிமண்டல வியல்திணைக்களம்நேற்று அதிகாலைஎச்சரித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, மத்திய, சப்ரகமுவ, வடமேல், மேல் மாகாணங்களிலும், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங் களிலும், கடுமையான மழை பொழியும் என்றும் எச்சரிக் கப்பட்டுள்ளது.

24 மணிநேரத்துக்குள் 150 மி.மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

மின்னல் தாக்கத்தில் இருந்து பாதிப்புகளை தவிர்க்க தேவையான முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறும் வளிமண்டல வியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட பகுதியில் காணப்படும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியிலான காலநிலை காரணமாக கடந்த சில நாள்களாக, வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடும் மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாடு திரும்பினார் மஹிந்த!



கொழும்பு, நவ. 02

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குழுவினரும் நேற்றுக் காலை நாடுதிரும்பியுள்ளனர்.

இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் நேற்றுக் காலை 8.25 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு கடந்த 28 ஆம் திகதி இந்தியா புறப்பட்டார். அவருடன் ஜீ.எல். பீரிஸும் இந்தியாவுக்கான விஜயத்தில் இடம்பெற்றிருந்தார்.

சர்வதேச பௌத்த கலாசார சம்மேளனம் மகராஷ்டிரா மாநிலத்தில் நடத்திய பௌத்த கலாசார மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே அவர் இந்தியாவுக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## நாமல் எம்.பிக்கு எதிரான வழக்கு பெப்ரவரி முதல் விசாரணைக்கு!



வெளிப்படுத்த முடியாத இலக்கங்கள் மூலம் 30 மில்லியன் ரூபாவை சம்பாதித்தார் என கறுப்புப் பண சுத்திகரிப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் கவர்ஸ் கோப்ரடீஸ் சேர்விசஸ் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் நால்வருக்கு எதிரான வழக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி முதல் விசாரணைசெய்யப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் இது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதே நீதிபதி இதனை அறிவித்தார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிக்கும் 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கொழும்பில் வைத்து, அறியாத பலருடன் சேர்ந்து சதித்திட்டம் தீட்டி சம்பாதித்ததை தெளிவுபடுத்த முடியாத வகையில் 30 மில்லியன் ரூபாவை சம்பாதித்தார் என ஊடாக கறுப்புப் பண சுத்திகரிப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் ஒன்றைப் புரிந்தமை, அதற்கு உதவி புரிந்தமை உள்ளிட்ட 11 குற்றச்சாட்டுக்களின் கீழ் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த கறுப்புப் பண சுத்திகரிப்பு வழக்கில் முதல் பிரதிவாதியாக நாமல் ராஜபக்ஷ பெயரிடப்பட்டுள்ளநிலையில் 2, 3 ஆம் பிரதிவாதிகளாக இந்திக பிரதாப் கருணாஜீவ, சுஜானி போகொல்லாகம ஆகியோரும் 4 ஆம் பிரதிவாதியாக ஒரெனெல்லா இரேஷா சில்வாவும் 5 ஆம் பிரதிவாதியாக நித்திய சேனானி சமரநாயக்கவும் 6 ஆவது பிரதிவாதியாக வரையறுக்கப்பட்ட கவர்ஸ் கோப்ரடீஸ் சேர்விசஸ் தனியார் நிறுவனமும் பெயரிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் விசாரணையின் போது இந்திக கருணாஜீவ தவிர ஏனைய பிரதிவாதிகள் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

இந்த நிலையில், பிரதி வாதிகளுக்கு கையளிக்கப்பட வேண்டிய ஆவணங்களை எதிர்வரும் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்து கையளிக்க தீர்மானித்த நீதிவான், அடுத்தகட்ட வழக்கு விசாரணைகள் அடுத்த வரு டம் பெப்ரவரி 16 ஆம் திகதி முதல் இடம்பெறும் எனவும் அறிவித்தார்.

## கொழும்பு மாநகர முதல்வர் வேட்பாளராக ரோசி சேனநாயக்கவை நிறுத்துகிறது ஐ.தே.க.!



கொழும்பு, நவ. 02

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில், முதல்வர் வேட்பாளராக ரோசி சேனநாயக்கவை களமிறக்க ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

இலங்கையில் விரைவில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இதில் முன்னாள், அமைச்சரும், கொழும்பு மேற்கு அமைப்பாளருமான ரோசி சேனநாயக்கவை, கொழும்பு மாநகரசபைக்கான முதல்வர் வேட்பாளராக, ஐக்கிய தேசியக் கட்சி நிறுத்தவுள்ளது.

ரோசி சேனநாயக்க தற்போது, பிரதமர் செயலகத்தின் பிரதி தலைமை அதிகாரியாகப் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய உணவு உற்பத்திச் செயற்றிட்டம் தொடர்பில் கலந்துரையாடல்!



கொழும்பு, நவ. 02

தேசிய உணவு உற்பத்தி செயற்றிட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு, மேற்கொள்ளப்பட வுள்ள கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் மற்றும் செயற்படுத்தல் திட்டத்தைத் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலை மையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற இந்தக் கலந்துரை யாடலில் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ உள்ளிட்ட அமைச் சுக்களின் செயலாளர்களும் ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (க)

## தினசரி ராசி பலன் 02.11.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 17 ஆம் நாள் வியாழக்கிழமை. திரயோசித்ததிதி மாலை 4.11 மணிவரை. பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம் உத்தரட்டாதி காலை 6.56 மணிவரை. பின்னர் அசுவினி. சித்தாமிர்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 1.21 மணிமுதல் 02.49 மணிவரை.

**சுபநேரம்** - காலை 7.37 மணிமுதல் 9.07 மணிவரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி**- ஐப்பசி மாத வளர்பிறை திரயோதசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** ரேவதி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு உண்டாகும். தொழில், வியாபாரம் குறைந்த பட்ச நன்மைகளைத் தரக் கூடியதாக இருக்கும்.

**ரிஷபம்:** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். முயற்சிகள் யாவும் வெற்றி பெறும். தொழில் பிரிவினர் திருப்திகரமான முன்னேற்றத்தைக் காணமுடியும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**மிதுனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் பெறலாம். தொழில் பிரிவினர் உழைப்புக்கேற்ற வருமானம் பெறுவதில் சிரமம்.

**கடகம்:** யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சிறப்பான நிர்வாகத்தால் பெண்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவார்கள்.

**சிம்மம்:** கவலையான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் அமைதியின்மை காணப்படும். உறவினர்களின் பாராமுகத்தால் கவலை உண்டாகும்.

**கன்னி:** மத்திமமான நாள். வரவும் செலவும் சமமாக இருக்கும். தொழில் வியாபாரம் ஏற்ற இறக்கமாகவே இருக்கும். வாகனத்தில் செல்லும் போது வேகத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

**துலாம்:** யோகமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு தானாக வரும். வியாபாரம் துரித வளர்ச்சி அடையும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். பணம் சரளமாகப் புழங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும். பெண்கள் நினைத்த காரியம் நிறைவேறும். பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரும்.

**தனுசு:** துன்பமான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் வந்து சேரும். நண்பர்களால் வாக்குவாதம் உண்டாகும். வியாபாரம் மந்தநிலையை அடையும்.

**மகரம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வியாபாரம் ஏற்ற இறக்கமாக காணப்படும். மாணவர்களின் படிப்பார்வம் சிறப்பாக இருந்து வரும். வேலையில் கவனம் குறையும்.

**கும்பம்:** உயர்வான நாள். பணவரவு அதிகரிக்கும். வியாபாரம் நன்கு முன்னேற்றமடையும். உத்தியோகத்தர்களுக்கு விரும்பிய உயர்வுகள் கிடைக்கும். தொழிற் பிரிவினர் உழைப்பிற்கேற்ற வருமானம் பெறுவார்கள்.

**மீனம்:** அதிர்ஷ்டமான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். உத்தியோகத்தர்கள் பெரும்பாலும் உயர் அதிகாரிகளின் நன்மதிப்பையும் சலுகைகளையும் பெறுவார்கள்.

சந்திராட்டமநாள்: மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில்பிறந்தோர்இன்றுசுபகருமங்களில்ஈடுபடுகின்றமையைத் தவிர்க்கவும்.

# ஸ்ரீலங்கன், மிஹின் எயார் குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு!

கொழும்பு, நவ. 02

முன்னைய அரசாங்க காலத்தில் ஸ்ரீலங்கன்எயார்லைன்ஸ், மிஹின் எயார் ஆகிய விமான சேவைகளில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் போது முன்னைய அரசு காலத்தில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ், மிஹின் எயார் ஆகிய நிறுவனங்களில் பெருமளவு ஊழல் இடம்பெற்றுள்ளமையினால் அதுகுறித்து விசாரணைநடத்த ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கு அனுமதி தரவேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளார்.

அன்றைய ஆட்சிக் காலத்தில் மிஹின் எயார் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் வாஸ் குணவர்த்தன ஆகியோர் அங்கம் வகித்திருந்தனர்.

அந்தவேளையில், இரு விமான நிறுவனங்களிலும் பெருமளவு மோசடி இடம்பெற்றுள்ளது. எனவே, இது குறித்து விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்படுகின்றமை அவசியமானதாகும். இதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இங்கு கருத்து தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கோரிக்கைக்கு அமைச்சர்கள், மேசையில் தட்டி ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ஆணைக்குழு அமைத்து மோசடியில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்று பெருமளவான அமைச்சர்கள் கருத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த நிறுவனங்களில் இடம்பெற்ற மோசடிகள்தொடர்பாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை அமைத்து விசாரணை நடத்த முடியும் அது குறித்தும் பரிசீலிக்க வேண்டும் என்ற தொனிப்பட கருத்துக் கூறியுள்ளார்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைப்பதற்கான இணக்கம் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## கனகராசாவின் நினைவு பேருரையும் சாரணர் சங்க மர நடுகை விழாவும்
### இன்று யாழ். பெரியபுலம் ம.வியில்



அமரர் கலாநிதி க.கனகராசாவின் 90 ஆவது அகவை நாளும் நினைவுப் பேருரையும், யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் மரம் நடும் விழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

வரவேற்புரையை உதவி மாவட்ட சாரண ஆணையாளர் எஸ்.தவநேசன் ஆற்றுவார். யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளர் செ.தேவரஞ்சன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளில், பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜாவும் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட முன்னாள் ஆணையாளர் மா.புவனேந்திரனும் கலந்து கொள்வர்.

நினைவுப் பேருரைகளை சிறப்பு விருந்தினர்கள் ஆற்றுவர். தொடர்ந்து கௌரவித்தல் நிகழ்வு, அணித்தலைவர்களின் பயிற்சிசான்றிதழ் வழங்கல் இடம்பெறும்.

நன்றியுரையை மில்க்வைற் அதிபர் சிவநேயர் இ.தவகோபால் நிகழ்த்துவார். (இ)

## கருகம்பனையில் இரத்ததான முகாம்

தெல்லிப்பழை கருகம்பனை தமிழ்மன்ற சனசமூக நிலையமும் இந்து இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இரத்ததான முகாம் கருகம்பனை தமிழ்மன்ற சனமூக நிலையத்தில் இடம்பெறும். இந்த வருடம் 5 ஆவது தடவையாக இந்த இரத்தான முகாம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## மின் தடை

யாழ்ப்பாணம், நவ. 02

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழன் காலை 8மணியிலிருந்து மாலை 5.30மணிவரை**வவுனியா பிரதேசத்தில்**-

சாளம்பைக்குளம் பிரதேசம், சாளம்பைக்குளம் புதிய வீட்டுத் திட்டம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** முருங்கன் பிரதேசத்திலும்-

நாளை வெள்ளி காலை 8மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்**-

சாளம்பைக்குளம் பிரதேசம், சாளம்பைக்குளம் புதியவீட்டுத்திட்டம் ஆகிய இடங்களிலும்-

**மன்னார் பிரதேசத்தில்**- முருங்கன் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார். (இ)

காலைக்கதிர் Kalaikkathir



# அகிம்சையை விதைப்போம்; அன்பை அறுவடை செய்திடுவோம்!







ஆக்கம்:
செல்வி சுபாஜினி குணரட்ணம்,
ஆசிரியர் யாழ் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

அகிலமெங்கும் அண்மைக் காலமாக அரங்கேறிவரும் அசம்பாவிதங்களும் வன்முறைகளும், வாள்வெட்டுக்களும், சமூகப்பிறழ்வுகளும் நிலையான நிரந்தர சமூகஅமைதியையும் பாதுகாப்பையும் பாழடைத்துவிடுகின்றன. இந்த வன்முறைகள் மனிதனுடைய இருப்பையே வாட்டிவதைக்கின்றன எனலாம். இன்றைய அவசர உலகில் எவரும் இந்த விடயத்தின் மட்டில் ஒரு சமூக அக்கறையை பெருமளவில் காட்டாதது வேதனையான ஒரு விடயமாகும். இன்று உலகெங்கும் நிகழ்வது வன்முறைக்கும் அகிம்சைக்கு மிடையிலான போராட்டமேயொழிய படைகளுக்கிடையேயான போராட்டமல்ல. வன்முறையில் ஒருசிலர் ஈடுபடும்போது அது அனைவரையும் ஏதோ ஒரு வழியில் பாதிக்கின்றது என்பது உண்மை.

மனித நேயம், மனித மாண்பு மண்தோண்டி புதைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இக்காலத்தில் தினம்தோறும் ஒரு மணித்தியாலயத்தைசர்வதேச அகிம்சை நேரமாக உலகெங்கும் கொண்டாடினால் பலநன்மைகளை நாம் அனுபவிக்கலாம் என ஆணித்தரமாகக் கூறலாம். அப்போது சர்வதேச அகிம்சைகள் தினம் மனித நேயத்தின், மனிதமாண்பின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் எடுத்துக் காட்டும். அத்துடன் வன்முறைகளில் இருந்து, வாள்வெட்டுக்களிலிருந்து எவ்வாறு விலகி வாழ முடியும் என்ற தத்துவத்தையும் தரணிக்குத் தந்துவிடும்.

**இயேசுபிரானின் கூற்று:**

உன் எதிரியையும் அன்பு செய் என்ற இயேசுபிரனின் கூற்றின் தத்துவத்திலிருந்து அகிம்சைக் கோட்பாடு உருவாகிறது என்றால் மிகையாகாது. அகிம்சையின் இலக்கு எதிரியைத் தோற்கடிப்பது மட்டுமல்ல எமக்குள்ளேயே சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்ளுதலும் அனைத்து உயிரினங்களையும் புரிந்துகொண்டு அன்பு செலுத்துவதுமாகும்.

அகிம்சை என்பது வன்முறையில் இருந்து விலகியிருப்பதல்ல. மாறாக அகிம்சை வாழ்வதற்கான ஒரு முறை. வாழ்நாளில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிமுறையாகும். எந்தவொரு சூழலிலும் தனக்கோ அல்லது மற்றவர்களுக்கோ தீங்கு செய்யாதவாறு வாழ்வதற்கான ஒரு பயிற்சியே அகிம்சையாகும் என்கிறார்கள். அகிம்சையின் ஊடாகவே உலகை மாற்ற முடியும் என்று பலர் நிரூபித்துள்ளனர். நாம் ஒவ்வொருவரும் அகிம்சை வழியினில் எமது வாழ்க்கையினை அமைப்போமாக இருந்தால் எங்கள் குடும்பத்திலும் சமூகத்திலும் அமைதியும் ஒற்றுமையும் ஓங்கியுயரும்.

**உலக அகிம்சை தினம்:**

உலக அகிம்சை தினத்தை ஆங்கிலத்தில் -International Day of Non-Violence vd என அழைப்பர்.15 ஜூன் 2007 அன்று கூடிய ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஐப்பசி மாதம் 2ஆம் நாளை அனைத்துலக அகிம்சை தினமாக அறிவித்தது. உலகில் வன்முறையை ஒழித்து அமைதியை நிலைநாட்டமகாத்மாகாந்தி அரும்பாடுபட்டதை கௌரவிக்கும் பொருட்டு அவருடைய பிறந்தநாளை சர்வதேச வன்முறையற்ற – அகிம்சை தினமாகப் பிரகண்டனம் செய்தது. அன்றி லிருந்து இன்றுவரை வருடம்தோறும் ஐப்பசி 2ஆம் திகதியை உலக அகிம்சைதினமாக கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. தனது வாழ்நாள் முழுவதும் அகிம்சையைக்கடைப்பிடித்து அதன் உன்னதத்தை அனைவருக்கும் உணர்த்திய மகாத்மா காந்தியின் கொள்கைகளை உலக நாடுகள் பறைசாற்றி, அகிம்சையின் மகத்துவத்தை பரப்ப வேண்டும் என்ற நோக்கில் இந்நாள் அனுசரிக் கப்படுகிறது.

வன்முறையாலும், போராலும் மட்டுமே உரிமைகளைப் பெறமுடியும் என உலகம் நினைத்திருந்தபோது அது பிழையானதென நிரூபித்த மகாத்மா காந்தி உலகத்தையே தனக்குள் அடைக்க நினைத்த பிரித்தானிய ஆட்சியாளர்களை ஆயுதம் எடுக்காமல் நாட்டை விட்டு வெளியேற்ற அகிம்சையையே பயன்படுத்தினார். மகாத்மா காந்தியின்நடைமுறைகளால்கவரப்பட்ட மார்ட்டின்லூதர்கிங், நெல்சன்மண்டேலா போன்ற தலைவர்கள் அகிம்சையைப் பயன்படுத்தியே தங்கள் வெற்றியை சுவீகரித்தனர் என்பது வரலாறு.

'அகிம்சை என்பது வலிமையற்றவர்களின் ஆயுதமல்ல, வலிமையற்றவர்கள் வன்முறையைத்தான் தேர்வு செய்வார்கள். வலிமையானவர்களால் மட்டுமே அகிம்சையின் பாதையில் நடக்கமுடியும். எதிரியை எழ முடியாமல் அடித்து வீழ்த்த வலிமை தேவையில்லை. எந்த தாக்கு தலையும் சமாளித்து எழுந்து நிற்கவே வலிமைதேவை' என்று மகாத்மா காந்தி கூறிய வார்த்தைகளை நாம் ஆழமாக சிந்தித்துப்பார்க்க வேண்டியகாலமிது.

**அகிம்சையின் பண்புகள்:**

அகிம்சை தன்னகத்தே பல பண்புகளை கொண்டுள்ளது: அகிம்சை தைரியசாலிகளின் ஆயுதமே ஒழிய ஒருபோதும் கோழைகளின் ஆயுதம் அல்ல. எத்தகைய துன்பத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும் ஒருபோதும் பழிவாங்க முயலாதே. எதிரியையும் ஆதரி. ஆனால், தீயசெயலுக்கு வெறுப்பைகாட்டிக்கொள். எதிரியை தோற்கடிக்காமல் அல்லது புண்படுத்தாமல், காயப்படுத்தாமல் அல்லது இழிவுபடுத்தாமல், அன்பினூடாக எதிரியை வெற்றி கொள்வதன் மூலம் முரண்பாட்டைத் தீர்ப்பதில் உறுதியாக இரு. துன்பத்தை ஏற்படுத்தாமல் துன்பத்தைஏற்றுக்கொள் என்பதாகுமெனலாம்.

**அகிம்சையின் பலம்**

அகிம்சையின் பலம் பலத்தின் பின் இனக்குரோதத்திற்கும், இனவன்மங்களுக்குவழியமைக்கும் செயற்பாடுகளில் பலர் நேராகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்றும் நாடு முழுவதும் ஏதாவது ஒரு நெருக்கடி நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. மதமோதல்கள், சமயமோதல்கள், சாதி மோதல்கள், வேற்றூரான் என்ற மோதல்கள் உருவாகி அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இப்பிரச்சினைகளுக்கு ஆயுதமே தீர்வென ஒவ்வொரு தரப்பும் நம்பி அதற்கான முன்னெடுப்புகளை ஆங்காங்கே அரங்கேற்கிறது. ஆயுதம் என்றும் தீர்வல்ல. அகிம்சையே தீர்வு என்பதை நாம் உணரவேண்டும். நாம் அனைவருமே கடவுளின் குழந்தைகள். கடவுள் விரும்பும் அமைதியை உருவாக்கவே படைக்கப் பட்டவர்கள். இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாம் எமது வாழ்க்கையை வழி நடத்திச்செல்ல அகிம்சையை கையிலெடுப்போம்.

அகிம்சை முறையில் நாம் வாழும்போது நீதியுடன் கூடிய, சமாதானத்துடன் கூடிய ஓர் உலகை உருவாக்க முடியும். அகிம்சையைதங்கள்வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியவர்களை இந்த உலகம் இன்றும் போற்றுகிறது என்றும் போற்றிக் கொண்டே இருக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.

நாங்கள் அனைவரும் அகிம்சையை அகிலத்தில் நிலைநாட்டுவதை எமது வாழ்வில் ஓர் இலட்சியமாக பின்பற்ற வேண்டும். சுயநலம் அற்று பொதுநலம் நோக்கிவாழ வேண்டும். அப்போதுதான் மனிதநேய இழப்பிலிருந்து எமது சமூகத்தை, நாட்டைப்பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கானவழிகாட்டிகளாகவும் விளங்க முடியும். அகிலத்தை அகிம்சையால் நிரப்ப முடியும். அகிம்சையை ஆள்களுக்குள் விதைப்போம், அகிலத்தில் அன்பை அறுவடைசெய்வோம். பயணம் தொடர்வோமா?



காலைக்கதிர்
Kalaikkathir



தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர்களின் தலைக்கு மேல் பறந்து கொண்டிருந்த சிவில் கார்ட் பொலிஸ் ஹெலிக் கொப்டர்களைப் பார்த்து விசிலடித்தனர்; பரிக சித்தனர். No pasarán (அது நடக்காது) என்ற 1936-1939 ஸ்பானிய உள் நாட்டுப் போரின் பிராங்கோ-எதிர்ப்பு முழக்கத்தை அவர்கள் முழங்கினர்.**



சனிக்கிழமையன்று கட்டலோன் அரசுத் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அவர்களுக்கு மாட்ரிட்டின் உத்தரவுக்குக் கீழ்ப்படிய எண்ணமில்லை என்பதைத் தெளி வாக்கிக் கொண்டிருக்கின்றனர். பிரிவு 155 ஐ கருத்து வெளிப்பாட்டு சுதந் திரம், தகவல் சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரத்தின் மீதும் தொழிலாளர்களின் தொழில்நேர்மை மீதுமான ஒரு நேரடியான, பயனற்ற மற்றும் ஆணவமான தாக்குதல் என்று கண்டனம் செய்கின்ற ஓர் அறிக்கையை TV3 தொழிலாளர்கள் விடுத்தனர். 2015 செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி ஜனநாயகரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டலோன் சட்ட மன்றத்துக்கே தாங்கள் தொடர்ந்தும் விசுவாசமாக இருக்கப்போகின்றனர் என அவர்கள் தெரிவித்தனர்.

கட்டலோனிய வானொலியின் தொழிற்கமிட்டி பொது ஊடகம் இல்லாமல் ஜனநாயகம் இல்லை என்று தலைப்பிட்ட ஓர் அறிக்கையை விடுத்தது. அந்த அறிக்கையை மீறுவதற்குச் சூளுரைத்தது. மத்திய அரசு வானொலி நிலையத்துக்கு ஒரு புதிய இயக்குநரைத் தெரிவுசெய்யுமானால், அந்த அதிகாரத்தை அங்கீகரிக்க மறுப்பதைத் தவிர எங்களுக்கு வேறேதும் வழி இருக்கப்போவதில்லை என்று அது எச்சரித்தது.

**கட்டலோனியாவில் இன்னும் இரத்தக்களரியானதோர் ஒடுக்குமுறைக்கான மட்ரிட்டின் திட்டங்களை எதிர்ப்பது ஸ்பெயின் மற்றும் ஐரோப்பாவெங்கிலுமான தொழிலாளர்களுக்கு இன்றியமையாததாகும்.**




கட்டலோனியாவில் இன்னும் இரத்தக்களரியானதோர் ஒடுக்குமுறைக்கான மட்ரிட்டின் திட்டங்களை எதிர்ப்பது ஸ்பெயின் மற்றும் ஐரோப்பா எங்கிலுமான தொழிலாளர்களுக்கு இன்றியமையாததாகும். கட்டலோனியாவின் தொழிலாளர்கள் மற்றும் வெகு ஜனங்களுக்கு எதிராக ரஹோயினாலும் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தாலும் தயாரிப்புச் செய்யப்பட்டு வருகின்ற தாக்குதலின் அரசியல் இலக்கு முன்னெப்போதினும் தெளிவாய் இருக்கிறது.

ஓர் ஒட்டுமொத்த மாநிலத்தின் மீதுமான பொலிஸ்-இராணுவ சர்வாதிகாரத்தின் உதாரணத்தைக் கொண்டு தொழிலாளர்களை அச்சுறுத்தி வைப்பதன் மூலம், நெருக்கடி-பின்னியிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தை ஸ்திரப்படுத்துவது என்பதே அது.

கட்டலோனியா மீதான தாக்குதல் 2001 செப்ரெம்பர் 11 தாக்குதல்களுக்குப் பின்னர் உலகெங்கிலும் தொடுக்கப்பட்ட ஜனநாயக உரிமைகள் மீதான பரந்த தாக்குதல்களின் வர்க்க உள்ளடக்கத்தை அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறது.

பொலிஸ் பிரிவுகள், மின்னணு வேவு நடவடிக்கைகள் மற்றும் பிரான்ஸின் அவசரகாலநிலை போன்ற உள்நாட்டு இராணுவ நிலைநிறுத்தங்கள் ஆகியவற்றின் பெரிய பெருக்கத்தைப் பயங்கரவாதத்தின் மீதான போர் என்று சொல்லி நியாயப்படுத்துவதற்கு அமெரிக்க மற்றும் ஐரோப்பிய சக்திகள் செய்த முயற்சிகள் ஓர் அரசியல் மோசடியாகும். அவற்றின் பிரதான இலக்காக அல்குவைதாவுடன் தொடர்புடைய இஸ்லாமியவாதிகள் இருக்கவில்லை. ஏனென்றால், அவர்களில் பலருக்கும் சிரியாவிலும் மற்ற இடங்களிலும் ஆட்சி மாற்றத்துக்கான



போர்களில் ஐரோப்பிய ஒன்றியக் கூட்டாளிகளிடம் இருந்தும் அமெரிக்காவிடம் இருந்தும் தான் நிதியாதாரம் கிட்டியது.

கட்டலோனியாவிலும் அமைதியான அரசியல் எதிர்ப்பின் மீது மட்ரிட் இத்தகைய பலப்பிரயோகம் செய்கின்றமையை ஐரோப்பிய ஒன்றிய சக்திகள் அனைத்தும் ஆதரிக்கின்றன என்றால் அதன்காரணம் அவையும் இதையே செய்யத் தயாரிப்புச் செய்து கொண்டிருக்கின்றன என்பதால் தான்.

கட்டலோன் சுதந்திரத்துக்கான கருத்துவாக்கெடுப்புக்கு இராணுவ ஆட்சி மட்டுமே சாத்தியமான ஒரே பதிலிறுப்பாக உள்ளது என மட்ரிட், ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிப்படையான ஆதரவுடன், கூறுகின்றமை ஏகாதிபத்திய இரட்டைவேடத்தில் தோய்ந்ததாகும். கிரேட் பிரிட்டனில் இருந்து சுதந்திரம் பெறுவதற்கான கருத்து வாக்கெடுப்பை ஸ்கொட்லாந்து 2014 இல் நடத்தியது.

கனடாவில் இருந்து சுதந்திரம் பெறுவதற்கான கருத்துவாக்கெடுப்புகளை கியூபெக் 1980 மற்றும் 1995 இல் நடத்தியது. அப்போதெல்லாம் அமைதியான வாக்காளர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கும் இந்தப் பகுதிகள் பிரிந்து செல்லும் நடவடிக்கைகளில் இறங்காமல் தடுப்பதற்கும் லண்டனோ ஒட்டாவாவோ பத்தாயிரக் கணக்கான துணை இராணுவப் பொலிஸ் மற்றும் இராணுவ அலகுகளை அனுப்பிவைக்கவில்லை.

நேரெதிராய், நேட்டோ ஏகாதிபத்திய சக்திகள் பிரிவினைவாத இயக்கங்களைப் பாதுகாக்கின்றமை என்னும் தங்களது புனிதமான கடமையை மறுபடியும் மறுபடியும் முன்நிறுத்தி -1999 இல் கொசாவோவில் 2011 இல் லிபியாவின் பெங்காசியில்- அவை கைப்பற்ற இலக்கு கொண்டிருந்த யூகோஸ்லாவியா, லிபியா போன்ற நாடுகளைத் தாக்குவதற்கு நியாயம் கற்பித்தன.



(கேள்வி தொடரும்)

# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



144




## அத்தியாயம் - VIII

## விடுதலைப் போரின் நாயகர்கள்

தமிழேந்தி தனித்துவமானவர். எவருடனும் ஒப்புவமை செய்ய முடியாத வித்தியாசமான மனிதர். பிரபாகரனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். மிகவும் அரிதாக எப்பொழுதாவது எமது வீட்டுக்கு வந்து செல்வார். இவர் ஒரு மூத்த உறுப்பினர். ஆரம்ப காலங்களில் இருந்து பிரபாகரனின் வலதுகரமாக இயங்கி வருபவர். காலப்போக்கில் இவர்களது உறவு மிகவும் நெருக்கமாக மாறியது. பிரபாகரனின் உள் வட்டத்தில் ஒருவராகச் செயற்பட்ட தமிழேந்தி, நீண்ட காலமாகவே விடுதலைப் புலிகளின்நிதிப் பிரிவுக்குப் பொறுப்பாளராக இருந்து வருகின்றார்.



பல ஆயிரம் கோடி பணத்தைக் கையாண்ட இந்த மனிதர், நேர்மையானவர்; ஒழுக்க சீலர். விடுதலைப் போரின் வெற்றிக்கு ஆயுதம் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததோ, அது போன்றுதான் நிதியும் என்பது தமிழேந்தியின் தத்துவம். இந்தக் கொள்கையுடன் நீண்ட காலமாகவே, எத்தனையோ நெருக்கடிகள் மத்தியிலும் இயக்கத்தின் நிதிப் பிரிவைச் சிறப்பாக, பொறுப்பாகக் கையாண்டு வருகிறார். இயக்கத்தின் பல்வேறு பிரிவுகளின் செலவீனங்களுக்கு நிதியைப் பகிர்ந்து வழங்குவதில் இவர் காட்டும் கண்டிப்பும் இறுக்கமும் சில சமயங்களில் இவருக்கு கண்டன விமர்சனங்களையும் தேடிக் கொடுப்பதுண்டு.

தமிழ்மொழியிலும், பண்டைய தமிழ் இலக்கியத்திலும் இவருக்குள்ள அலாதியான காதல், திருவள்ளுவரின் அறநெறித் தத்துவத்திலுள்ள ஆழமான பற்று, தென்னிந்தியத் திராவிட இயக்கத்தின் சீரழிவால் அவருக்கு ஏற்பட்ட ஆதங்கம் - இவற்றால் தமிழ்த் தூயவாதி என்ற பட்டப் பெயரையும் இவர் தேடிக் கொண்டார். இப்படியான தனிப் போக்குகளும் பற்றுகளும் இருந்தபோதும் தமிழேந்தி மிகவும் பண்பான மனிதர்; மதிநுட்பமுடையவர். விடுதலைப் போராட்டத்தில் மூன்று சகோதரர்களைக் களப் பலி கொடுத்தவர் என்பதாலும், போராளிகளும் பொதுமக்களும் செய்த அளப்பரிய ஈகங்களுக்குப் பெருமதிப்பு அளிப்பார் என்பதில் தமிழேந்திக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

விதுஷா பெண் தளபதிகளில் மிகவும் பிரபல்யமானவர். எல்லோரினதும் மதிப்பிற்குரியவர். தனித்துவமான சிறப்பியல்புகளைக் கொண்டவர். விதுஷா எமது வீட்டிற்கு அரிதாக, எப்பொழுதாவது வருவார். எனினும், இவரை இளம் வயதிலிருந்தே எமக்குத் தெரியும். வடமராட்சியில் கப்பூது எனும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அபூர்வமான செயற்றிறனைக் கொண்ட இந்த வீராங்கனை மிகவும் தன்னடக்கமானவர். விடுதலைப் புலிகளுக்கும் பிரேமதாசா அரசுக்கும் மத்தியில் பேச்சுக்கள் நிகழ்ந்த காலத்தில் நான் முல்லைத்தீவிலுள்ள அலம்பில் காட்டுக்கு விஜயம் செய்த போது, பெண்களுக்கான அதிரடிப் பயிற்சி முகாமில் விதுசாவைச் சந்தித்தேன். இயக்கத்தில் இணைந்த அந்த ஆரம்பக் காலத்தில் அவருக்குப் பதவி எதுவும் இருக்கவில்லை. ஆயினும், 1990ஆம் ஆண்டிலிருந்து போர்க்களத்தில் குதித்த விதுஷா, எத்தனையோ சமர்களில் பங்கு பற்றி வீர சாதனைகள் படைத்தார். அவரது அபாரமான துணிவும் தலைமைத்துவப் பண்புகளும் காரணமாக அவர் படிப்படியாகப் பதவியுயர்வு பெற்று மூத்த கள ஆண் தளபதிகளுக்கு சம நிலையாகக் கேணல் ரக மேற்பதவிக்கு உயர்த்தப்பட்டார். ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் என்ற ரீதியிலும், கெரில்லாப் போரிலும் மரபுவழிப் போரிலும் பெண்களின் பங்கு என்ற ரீதியிலும், ஒரு தசாப்தத்துக்கு மேலான விதுஷாவின் கள அனுபவமும் தலைமைத்துவமும் பிரமாதமானவை. உலக இராணுவ வரலாற்றில் போற்றுதற்குரிய பெண் போராளி என்ற உன்னத இடத்தை அவர் பெற்றிருக்கிறார்.



கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக, பெண் போராளிகளுக்குத் தலைமை தாங்கி படை நகர்த்தினார். அத்தோடு, போர் முனைகளில் அவர்களது அனுபவங்களையும் பகிர்ந்துள்ளார். விடுதலைப் புலிகளின் இராணுவக் கட்டமைப்பிலுள்ள போராளிகளில், ஏராளமான களங்களைக் கண்டு அனுபவ முதிர்ச்சி அடைந்தவர்களில் விதுஷாவும் ஒருவர்.

எமது வீட்டுக்கு வருகை தரும் போராளிகளும் நண்பர்களும் பல்வேறு கருத்துக்களைச் சொல்வார்கள்; கண்டன விமர்சனங்களையும் முன்வைப்பார்கள். சிலரது உரையாடல்கள் நகைச்சுவை நிறைந்தவையாக இருக்கும். இவர்களில் முக்கியமானவர் புதுவை இரத்தினதுரை. புதுவை எமக்கு நெருங்கிய நண்பர். புகழ்வாய்ந்த கவிஞர். ஈழத்து இலக்கிய வட்டத்தில் மிகவும் பிரபல்யமானவர். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆஸ்தானப் புலவர். அபாரமான ஆளுமையுடைய மனிதர்.

எல்லாப் பிரச்சினைகளையும் ஆழமாக, அக்கறையுடன் அலசிப் பார்க்கும் இயல்பு புதுவைக்கு உண்டு. சில விடயங்களில் உறுதியான, கடும் போக்கையும் கொண்டிருப்பார்.



சிற்பக் கலையிலும் அவர் ஒரு விற்பன்னர். இதனால் அவரது உலகப் பார்வை தமிழ்ப் பண்பாட்டை மையமாகக் கொண்டிருக்கும். தமிழ் மொழியில் மட்டுமன்றி, தமிழரின் பண்பாட்டு முறைமைகள் பற்றியும் புதுவையிடம் ஆழமான அறிவு உண்டு. இதனால் தமிழரின் வாழ்க்கை முறையில் பொதிந்து கிடக்கும் பல்வேறு அர்த்த பரிமாணங்கள் பற்றி நான் புதுவையிடம் விளக்கம் பெற்றுக் கொள்ள முடிந்தது. மனதில் உள்ளதை மனம் திறந்து பேசும் உரிமை தனக்குண்டு என்பதை அச்சமின்றி அடித்துக் கூறும் புதுவையின் சீரிய மாண்பு எனக்குப் பிடிக்கும். புதுவையின் வாயிலிருந்தே மிகவும் கூர்மையான - உயிர்த் துடிப்பான - விமர்சனங்கள் வெளிவரும்.

அதுபோலவே அவரது நகைச்சுவையும் மொழியை மிகவும் நுட்பமாகவும் லாவகமாகவும் கையாண்டு கிண்டலாக அவர் சொல்லும் பகிடிகள் வயிறு குலுங்கச் சிரிப்பூட்டும். அவர் அடிக்கடி எமது வீட்டுக்கு வருகை தருவார். நாமும் அவரது வீட்டுக்குச் செல்வோம். அப்பொழுதெல்லாம், தனது வெற்றிலைப் பெட்டியைத் திறந்து ஒரு வெற்றிலையை எனக்குத் தந்து விட்டு தனது வெற்றிலையின் காம்பை நுள்ளி எறிந்து விட்டு அதன் முதுகில் சுண்ணாம்பைத் தடவி, பாக்குச் சீவல்களை வைத்து மடித்து, பின் அதனை வாய்க்குள் செருகி, உதடுகள் இரத்தமாகச் சிவக்கும் வரை நன்றாக மென்று அசை போட்டவாறு நகைச்சுவையோடு உரையாடுவார் புதுவையர். இப்படியாக பல குளிர்மையான மாலைப் பொழுதுகளை மகிழ்ச்சிகரமாக அவருடன் கழித்தோம்.

(தொடரும்...)

# சர்வமத சிறுவர் சுற்றுலா







யாழ்ப்பாணம் கியூடெக் - கரித்தாஸ் சர்வமத சிறுவர்கள் அண்மையில் நாவாந்துறை,கண்ணாபுரம், மூர் வீதி, அல்லைப் பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்கள் மருதனார்மடம், ஆஞ்சநேயர் ஆலயம்,ஆச்சிரமம்,மாதகல் கெபி,கீரிமலை, ஜம்புகோளப் பட்டணம், மதத் தலங்களையும் தரிசித்து உள ஆற்றுப்படுத்தல் மூலம் சர்வமத நல்லுறவைச் சிறுவர்கள் மகிழ்வுடன் பகிர்ந்து கொண்டனர். (இ)

# புதுடில்லியில் உணவுப் பொருள் கண்காட்சி; இங்குள்ள முகவர்களும் பங்குபற்றலாம்

யாழ்ப்பாணம்,நவ.02

ஜனவரி 18 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் மாபெரும் உணவுப் பொருள் கண்காட்சி இடம் பெறவுள்ளது.

இக் கண்காட்சியில் பால் உணவுப் பொருள்கள், கடலுணவு வகைகள், கோழி மற்றும் இறைச்சி வகைகள், பழங்கள், மரக்கறி வகைகள் மற்றும் வாசனைத் திரவியங்கள், எண்ணெய் வகைகள், சேதனை மற்றும் மருத்துவ மூலிகைகள், திராட்சைப் பழ குடி வகைகள் போன்றவை காட்சிப்படுத்தப் படவுள்ளன.

மேற்கண்ட பண்டங்களின் உற் பத்தியாளர்களும், விற்பனையாளர் களும் நேரடியாக சந்திப்பதற்கும், வர்த்தக உறவுகளை வலுப்படுத்தவும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப் படும் என்று இந்திய அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது என இந்தியத் துணைத் தூதர் யாழ். வணிகர் கழகத்துக்குத் தெரியப்படுத் தியுள்ளார்.

இந்தக் கண்காட்சியில் பங்குபற்ற தகுதியுடையவராக இனம் காணப்படும் மேற்படி உணவுப் பொருள்களின் இறக் குமதியாளர்கள் இந்தக் கண்காட்சி யில் பங்குபற்றினால், இலவச விமா னப் போக்குவரத்துப் பயணச் சீட்டும், தங்குமிட வசதிகளும் வழங்கப்படும் வாய்ப்பு உண்டு.

எனவே, இந்த வாய்ப்பை பயன் படுத்தி பயன்பெறுமாறும் மேற்படி உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் முகவர்கள் யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப் படுகிறது. (இ)

# வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.02

ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கமைவாக அரிசி உட்பட அத்தியாவசிய உப உணவுப் பொருள்களை, சதொசா மூலம் மலிவு விலைகளில் தனியார் வர்த்தகர்களும் பெற்று, சாதாரண மக்களுக்கு நியாயமான விலைகளில் இவற்றை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை ஒன்றை சதொசாவினர் யாழ். வணிகர் கழகத்துக்கு முன் வைத்துள்ளனர்.

இது தொடர்பாக எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழக பணிமனையில் கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள் ளது. இந்தக் கலந்துரையாடலில் சதொசா நிறுவன அதிகாரியும், யாழ். வணிகர் கழக நிர்வாக சபை உறுப்பினர்களும் பங்குபற்றுவர்.

எனவே, யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பலசரக்கு வர்த்தகர்க ளையும் இந்தக் கலந்துரையாடலுக்கு வருகை தந்து தங்களது கருத்துக் களை முன்வைக்குமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொள்கின்றது. (இ)

## ‘முதுசித்தம்’ சஞ்சிகை வெளியீடும் ஒன்றுகூடலும்

வவுனியா,நவ.02

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் கல்வியியல் முதுமாணி அணி (IV) 2015/2016 மாணவர்கள் நடத்தும் ‘முதுசித்தம்’ சஞ்சிகை வெளியீடும் ஒன்று கூடலும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா றோயல் கார்டன் மண்டபத்தில் மாணவர் மன்றத் தலைவர் ல.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக் னேஸ்வரன் கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேரா சிரியர் கு.மிகுந்தன் மற்றும் விசேட விருந்தினராக யாழ்ப்பாணப் பல்க லைக்கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

# தொழில் பயிற்சியாளர்களுக்கான உபகரணம் வழங்கல்





பன்னைக்கைப்பணிப் பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்குதொழிலைச் செய்வதற்கான உபகரணங்களும் 6 மாதக் கொடுப்பனவும் வழங்கும் நிகழ்வு அல்லைப்பிட்டி வெண்புர விநகரில் அண்மையில் நடைபெற் றது.

இந்த நிகழ்வில் பனைஅபிவிருத்திச் சபை முகாமையாளர் கோபால கிருஷ் ணன், இணைப்பாளர் திருமதி. பவானி, கியூடெக் - கரித்தாஸ் , இணைப்பாளர் யோசப்பாலா ஆகியோர் இணைந்து தொழில் முயற்சியாளருக்கான கொடுப் பனவையும் உபகரணங்களையும் வழங்கினர்.

பனைஅபிவிருத்திச் சபை முகா மையாளர் கோபாலகிருஷ்ணன் உரை யாற்றுகையில் முயற்சியாளர்களுக்கு இவ்வாண்டில் முக்கியமான நிதிகளை அரசு ஒதுக்குவதால் அதனைச் சமூக மட்ட முயற்சியாளர்கள் முறையான வழிகளில் பயன்படுத்த முயன் றால் உங்கள் வீட்டில் இருந்தே வரு மானத்தைப் பெறமுடியும் எனக் கூறினார்.

இணைப்பாளர் திருமதி. பவானி உரையாற்றுகையில் பெண்கள் கல்வி கற்று உத்தியோகம் பெறுபவர்கள். ஒரு பகுதியினர் திருமணம் முடித்துவீட்டில் குடும்பத்தைப் பார்ப்பவர்கள் இப்படி யான கைத்தொழிலைக் கற்று குடும்பத்திற்கு வருமானத்தை ஈட்ட லாம். திணைக்களத்தினால் ஒதுக்கப் பட்ட நிதியை சரியான முறையில் கிராம வளங்களையும் பயன்படுத்தி உற்பத்திப் பொருள்களைவடிவமைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வ தன் மூலம் அந்நியச் செலாவணியைப் பெருக்கமுடியும் எனவே பெண்கள் கூடுமானவரை இப்படியான பயிற்சி களில் பங்கெடுப் பதன் மூலம் கிராமத் தின் வளங்களைக் கொண்டே வருமா னத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனக் கூறினார்.

அதனைத் தொடர்ந்து இணைப்பாளர் யோசப்பாலா இக்கைப்பணிப் பயிற் சியின் மூலம் சமூகத்தை ஒன்றிணைக் கவும் வளங்களைக் கொண்டு வருமானத் தைப் பெருக்கவும் இதனை ஏனை யோரையும் இணைத்துப் பயிற்றுவிப் பதன் மூலம் எமது கிராமத்தின் பொருளா தாரத்தை மேம்படுத்த முடியும் என்றார்.

# அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் மனிதசங்கிலிப் போராட்டம்!

## இன்று செயலகம் முன்பாக

வவுனியா, நவ. 02

உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்க வலியுறுத்தி மனித சங்கிலிப் போராட்டத்திற்கு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

அனைத்து அரசியற் கைதிகளையும் விடுதலை செய்யக் கோரியும் வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த அரசியற் கைதிகளுக்கெதிரான வழக்கை இடமாற்றியமைக்கு எதிராக அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

அந்த அரசியல் கைதிகளின் கோரிக்கையை ஏற்று மீண்டும் வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கை விசாரணை செய்யக் கோரியும் இன்று பகல் 2.30 மணிக்கு வவுனியா செயலகத்துக்கு முன்பாக நடைபெற இருக்கும் மனித சங்கிலிப் போராட்டத்தில் பொது மக்களை கலந்துகொண்டு கோரிக்கைகளை வலியுறுத்துமாறு அனைவரையும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை விடுக்கின்றது என அமைப்பின்வவுனியாமாவட்ட செயலாளர்சு.டோன்பொஸ்கோ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ளஅறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ் மக்களின் அரசியற் கோரிக்கைகளை அடைவதற்குப் போராடியவர்களைப் பயங்கரவாத நடவடிக்கை என மீண்டும் மீண்டும் அரசு வலியுறுத்திக் கொண்டே செல்கின்றது.

அந்தக் கோரிக்கையை முன்வைத்துப் போராடிய விடுதலைப் புலிகளுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யப்பட்ட போதிலும் புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கானோர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை அநீதியானதாகும்.

ஏற்கனவே பல தடவைகள் ஆயுதம் தாங்கிப் போராடியவர்களை அரசு விடுதலை செய்து தேசிய நீரோட்டத்தில் இணைத்துள்ளது கடந்த கால மஹிந்த அரசாங்கம் போல நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போவதாக கூறி பதவிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கமும் இந்த அரசியற் கைதிகளை விடுதலை செய்வதை தொடர்ந்து மறுத்து வருகின்றது.

கடந்தநான்கு ஆண்டுகளாக வவுனியாமேல் நீதி மன்றத்தில் நடைபெற்று வந்த சந்தேக நபர்களுக்கெதிரான விசாரணைகள் அனுராதபுரம் நீதி மன்றத்துக்கு மாற்றப்பட்டமை நீதித்துறை மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடாகும். கடந்த எட்டு வருடங்களாக வட பகுதியிலும் இயல்பு வாழ்க்கை, பாதுகாப்பு பலமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அரசாங்கம் கூறிவருகிறது.

எந்தவிதமான அச்சுறுத்தல்களோ, ஆயுதப் போராட்டங்களோ இல்லாத போதிலும் சட்டமா அதிபர் சாட்சிகளின் பாதுகாப்புக் கருதி அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு வழக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறுவதன் மூலம் வட பகுதி பாதுகாப்பான பிரதேசமாக இல்லை, சாட்சிகளுக்கு பாதுகாப்பு இல்லை, பாதுகாப்பு பிரிவினர் பாதுகாப்பை சரியாக மேற்கொள்ளமுடியாதவர்களாக இருக்கின்றார்கள் எனக் கூறுகின்றாரா? ஜனாதிபதியும், பிரதமரும் அண்மையில் வவுனியாவுக்கு வருகை தந்த போது பாதுகாப்பு பிரச்சினை ஏற்படவில் லையா? என்பதை மக்களுக்கு சட்டமா அதிபர், பாதுகாப்பு அமைச்சர்ஆகியோர் விளக்க மளிப்பாரானால் நன்றாய் இருக்கும்.

நாட்டின் பாதுகாப்புப் பற்றி ஏன் சந்தேகம் கொள்கிறார் என்பதைத் தெளிவுபடுத்த வேண் டும் அல்லது அவர் நீதிபதிகள்சரியானதீர்மானம் எடுக்க முடியாதவர்கள் என சந்தேகம் கொண்டுள்ளாரா எனத் தெரியப்படுத்த வேண்டும்.

சட்டமா அதிபரின் செயற்பாடு நீதித்துறையின் செயற்பாடுகளிலும் சந்தேகத்தை ஏற்படுபடுத்துவதுடன் இன நல்லிணக்கத்துக்கும் கேடு விளைவிப்பதாக அமையும்.

ஆகவே, மீண்டும் வவுனியா நீதி மன்றத்தில் விசாரணையை நடத்த ஏற்பாடு செய்யவேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-100)

## யாழ். ஏ–9 வீதியில் கடுமையான மூடுபனி!

நாட்டில்நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக வடமாகாணத்தில் நேற்றைய தினம் இயல்பு நிலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - கண்டி ஏ9 பிரதான வீதியில் கடுமையான மூடுபனி நிலைமை ஒன்றுஏற்பட்டுள்ளது.

காலை 4 மணியில் இருந்து 8 மணிவரை இந்த பனி மூட்டம் காணப்பட்டது.

ஏ9 வீதியின் வவுனியா, ஓமந்தை, புளியங்குளம், மாங்குளம் ஆகியபிரதேசங்களின் வீதிகளை பனி மூடியுள்ளது என கூறப்படுகின்றது.

இதன் காரணமாக பிரதான வீதியின் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த வீதியின் ஊடாகப் பயணிப்போர் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு பொலிஸார்எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மின்விளக்குகளை ஒளிரவிட்டு வாகனம் செலுத்துமாறு சாரதிகளுக்கு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-100)

## புதிய கடற்படைத் தளபதியுடன் இராஜாங்க அமைச்சர் சந்திப்பு!



கொழும்பு, நவ. 02

புதிதாக நியமிக்கப்பட்ட கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிரிமேவன் ரணசிங்க பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தனவை சந்தித்துள்ளார்.

22 ஆவது கடற்படையின் புதிய தளபதி தனது கடமைகளை பொறுப்பெற்ற பின்னர் உத்தியோக பூர்வமாக பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் பாதுகாப்பு அமைச்சரை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது சிநேக பூர்வ கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதுடன், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் புதிய கடற்படைத் தளபதிக்குத் தமது வாழ்த்துக்களையும் இதன்போது தெரிவித்தார்.

இந்த நிகழ்வை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

## கோப்பாய் பாலத்திற்கு அருகில் ஆண் ஒருவரது சடலம் மீட்பு!





மருதனார்மடம்-கைதடி வீதியில், கோப்பாய் பாலத்தடியில் உள்ள பரவைக் கடல் ஓரமாக நேற்றுக் காலை நபர் ஒருவரது சடலம் காணப்பட்டுள்ளது. சடலத்தின் அருகில் அந்த நபர் பயணித்தார் என்று நம்பப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் விபத்துக் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என்று சொல்லப்பட்டாலும் அவர்பயணித்தார் என்று நம்பப்படும் மோட்டார் சைக்கிள் விபத்து ஏற்பட்டிருப்பதற்கான தடயங்கள் எனவும் காணப்படவில்லை என்றும், அவரது தலைக் கவசம் மோட்டார் சைக்கிளில் கொழுவிய நிலையில் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான தடயவியல் பரிசோதனைகளை யாழ்ப்பாணம் குற்றப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண் டுவரும் நிலையில் இதுகுறித்த விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பிரதான பாதை சேதம்; முல்லை. மக்கள் பாதிப்பு!



முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேசத்தின் பிரதான பாதையொன்றைப் புனரமைப்பதற்கு இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்காது இருக்கிறது என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ளபுத்துவெட்டுவான் பழைய முறிகண்டிஐயன் கன்குளம் ஆகிய பகுதிகளுக்கான பிர தான வீதி புனரமைக்கப்படாதநிலையில் உள்ளது. இந்த வீதியில்பெரிய குழிகள்காணப்படுவகின்றமையால் தற்போது மழை பெய்ய ஆரம்பித்துள்ள நிலையில்அந்த குழிகளில் நீர் தேங்கிக் காணப்படுகிறது.

ஓரளவு போக்குவரத்திற்கு ஏதுவாக காணப்பட்ட இந்த வீதியூடாக மணல் கிரவல் மற்றும் காட்டுமரங்களை கனரக வாகனங்களில் கொண்டு செல்வதன் ஊடாக வீதிகள் மிக மோசமாக சேதமடைகின்றன.

இந்தப் பிரதானவீதியை புனரமைப்பதற்கும் இங்கிருந்து வளங்களை அபகரித்துசெல்கின்றமையை தடுப்பதற்கும் இதுவரை எவ ரும் நடவடிக்கை எடுக்க வில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir



## இரட்டை இலை விவகாரம்:

# உப்புச் சப்பில்லாத வாதங்களை முன் வைக்கின்றார் தினகரன்

## அமைச்சர் ஜெயக்குமார் சாட்டை



புதுடில்லி,நவ.02

தேர்தல் ஆணையத்தில் உப்புச் சப்பில்லாத வாதங்களை டி.டி.வி. தினகரன் முன்வைத்து வழக்கை இழுத்தடிக்க முயற்சிக்கின்றார் என அமைச்சர் ஜெயக்குமார் குற்றசாட்டியுள்ளார்.

தேர்தல் ஆணையத்தால் முடக்கப்பட்ட இரட்டை இலைச் சின்னம் மற்றும் அ.தி.மு.க.வை கைப்பற்ற ஓ.பி.எஸ்.-இ.பி.எஸ். அணியும், டி.டி.வி. தினகரன் அணியினரும் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பாக தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தி வருகின்றது. இதற்காக இரு தரப்பும் தேர்தல் ஆணையத்தில், தங்களுக்கு உள்ள ஆதரவை நிரூபிக்கும் ஆவணங்கள், பிரமாணப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையில் ஓ.பி.எஸ். - எடப்பாடி பழனிச்சாமி மற்றும் டி.டி.வி. தினகரன் தரப்பில் முன்நிலையான வழக்கறிஞர்கள் தங்களது தரப்பில் விளக்கங்களை அளித்து வாதாடினார்கள். இதற்காக இரு அணி நிர்வாகிகளும் டில்லியில் முகாமிட்டுள்ளனர்.

விரைவில் இறுதி முடிவு எட்டப்படும் என்ற எதிர்பார்ப்பு உள்ள நிலையில், டில்லியில் அமைச்சர் ஜெயக்குமார் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

தேர்தல் ஆணையத்தில் உப்புச் சப்பில்லாத வாதங்களை டி.டி.வி. தினகரன் முன்வைத்து வழக்கை இழுத்தடிக்க முயற்சிக்கிறார். தி.மு.க.வுடன் சேர்ந்து கொண்டு கட்சியையும் இரட்டை இலைச் சின்னத்தையும் முடக்கச் சதி செய்கின்றார்.

கட்சியில் இருந்து விலகுகின்றேன் எனக் கூறிய அவர் இப்போது உபத்திரவம் செய்கிறார். சசிகலா, தினகரன் உள்ளிட்ட யாருக்குமே அரசியல் எதிர்காலம் இல்லை. கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டார் என நவநீதகிருஷ்ணன் எம்.பி. மீது நடவடிக்கை எடுக்கக் கோரி நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு அளித்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (ப)

## கொல்கத்தாவில் மன நோயாளியின் வயிற்றில் 639 ஆணிகள்!





கொல்கத்தா,நவ.02

கொல்கத்தாவில் மனநோயாளி ஒருவரின் வயிற்றில் இருந்து 639 ஆணிகளை வைத்தியர்கள் அறுவைச்சிகிச்சை மூலம் அகற்றியுள்ளனர்.

மேற்கு வங்காள மாநிலம் கோபர்க்தங்கா பகுதியைச் சேர்ந்த 48 வயதான மனநோயாளி ஒருவர் கடந்த சில தினங்களாக தொடர் வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்துள்ளார். அடிக்கடி வாந்தியும் எடுத்துள்ளார். இதையடுத்து அவரை கொல்கத்தாவில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர்.

வைத்தியர்கள் அவரைப் பரிசோதனை செய்து பார்த்தபோது வயிற்றினுள் சிறியதும் பெரியதுமான நிறைய ஆணிகள் இருந்தமை தெரிய வந்தது. இதையடுத்து அறுவைச் சிகிச்சை செய்து அந்த ஆணிகள் அகற்றப்பட்டன.

அறுவைச்சிகிச்சை செய்த வைத்தியர் சித்தார்த்த பிஸ்வாஸ் இதுபற்றி கூறுகையில், இந்த மனநோயாளி அடிக்கடி ஆணிகளை விழுங்கியுள்ளார். அந்த ஆணிகள் குடல் பகுதியில் தேங்கி உபாதையை ஏற்படுத்தியுள்ளன.

இதையடுத்து அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. இதன்போது அடிவயிற்றில் 639 ஆணிகளை இவ்வாறு அகற்றியுள்ளோம். இரைப்பையில் தேங்கியிருந்த மண்ணும் அகற்றப்பட்டது. என்று தெரிவித்துள்ளார். (ப)



### பதாகைகளுக்குத் தடை

## கோவையில் ராட்சத பலூனில் அ.தி.மு.க. விளம்பரம்

கோவை,நவ.02

உயிரோடு இருப்பவர்களின் படத்தை வைக்க நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில் கோவையில் அ.தி.மு.க.வினர் ராட்சத பலூனில் விளம்பரம் செய்தமை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

டிஜிட்டல் பதாகைகளில் உயிரோடு இருப்பவர்களின் படத்தை வைக்க நீதிமன்றம் தடை விதித்தது. இந்த நிலையில் கோவை காந்திபுரத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நேற்று மாலை திறந்து வைத்தார்.

விழாவில் பங்கேற்பதற்காக கோவைக்கு சென்ற முதலமைச்சரை வரவேற்று காந்திபுரம் மேம்பாலத்தின் அருகே ராட்சத பலூன் பறக்க விடப்பட்டுள்ளன.

அந்த பலூனில் மறைந்த முதலமைச்சர்களான எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரது படங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, எம்.எல்.ஏக்கள் அம்மன் அர்ச்சுனன், பி.ஆர்.ஜி.அருண்குமார் ஆகியோரது உருவப்படம் பதிக்கப்பட்டுள்ள அந்த பிரமாண்ட பலூன் வானில் பறக்க விடப்பட்டுள்ளது. (ப)

## 22 ஆயிரம் கோடி ரூ. செலவில் அதிநவீன ஹெலிக்கொப்டர்கள்



புதுடில்லி,நவ.02

இந்திய விமானப்படைக்கு 21,783 கோடி ரூபாய் செலவில் 111 அதிநவீன ஹெலிக்கொப்டர்கள் வாங்க இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்திய இராணுவத்துக்குத் தேவையான கணிசமான ஆயுதங்கள் உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன. வெளிநாடுகளில் இருந்து அதிக அளவில் ஆயுதங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. சமீபத்தில் மாநாடு ஒன்றில் பேசிய இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன், இராணுவத்தை நவீனப்படுத்த முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், இராணுவத்தின் போர்த்திறனை மேம்படுத்துவதற்கு இடையூறாக உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

இதன் அடிப்படையில், இந்திய விமானப்படைக்கு 21,783 கோடி ரூபாய் செலவில் 111 அதிநவீன ஹெலிக்கொப்டர்கள் வாங்க இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஒப்புதல் அளித்துள்ளார்.

இவற்றில் 16 ஹெலிக்கொப்டர்கள் வெளிநாட்டில் இருந்து கொள்முதல் செய்யப்படும். 95 ஹெலிகொப்டர்கள் உள்நாட்டில் தயாரிக்கப்படும். இதற்காக வெளிநாட்டு ஹெலிக்கொப்டர் தயாரிப்பு நிறுவனம் மற்றும் உள்நாட்டில் உள்ள ஹெலிக்கொப்டர் தயாரிப்பு நிறுவனத்தைத் தேர்வு செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

## பாபர் மசூதிக்கு உரிமை கோருகிறார் மொகல்லாய மன்னரின் வாரிசு



அயோத்தி விவகாரத்தில் திடீர் திருப்பமாக மொகல்லாய மன்னரின் வாரிசான யாகூப் ஹபிபுதீன் பாபர் மசூதி எனக்கே சொந்தம் என்று கூறியுள்ளார்.

மொகல்லாய மன்னர்களில் ஒருவரான பகதூர் ஷா ஜப்பாரின் வாரிசான இளவரசர் யாகூப் ஹபிபுதீன், உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

அயோத்திச் சர்ச்சை தொடர்பாக நீதிமன்றத்திற்கு வெளியே பேச்சுவார்த்தை நடத்துவது குறித்த ரவி சங்கரின் ஆலோசனையை வரவேற்கிறேன். பெங்களூரில் ரவி சங்கரை சந்தித்து இது குறித்துப் பேசினேன். இந்த விடயத்தில் தலையிட ஷியா வகுப்பு வாரியத்துக்கு உரிமை கிடையாது.

பாபர் மசூதி எனக்கே சொந்தம். எனவே என்னை அதன் பொறுப்பாளராக நியமிக்க சன்னி வகுப்பு வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக உத்தரப் பிரதேச சிறுபான்மை நலத்துறை அமைச்சர் சவுத்ரி லட்சுமி நாராயணனை சந்தித்து மனு அளித்துள்ளேன். என்னைப் பொறுப்பாளராக நியமிக்காவிட்டால் நீதிமன்றத்திற்குச் சென்று என்னுடைய உரிமையை நிலைநாட்டுவேன் என்று தெரிவித்துள்ளார்.

# லிபியாவில் வான் தாக்குதல் சிறுவர்கள் உட்பட 15 பேர் சாவு

திரிபோலி,நவ.02

லிபியாவில் இராணுவம் கிளர்ச்சியாளர்களைக் குறிவைத்து நிகழ்த்திய வான் தாக்குதலில் பெண்கள், சிறுவர்கள் உட்பட அப்பாவி மக்கள் 15 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

லிபியாவின் கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் சிரெனைகா பிராந்தியத்தில் உள்ள மிகப்பெரிய கடற்கரை நகரம் டெர்னா. இந்த நகரம் மதவாதப் பயங்கரவாதிகள் மற்றும் டெர்னா முஜாகீதின் ஷூரா கவுன்சில் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

அவர்களிடம் இருந்து இந்த நகரை மீட்க லிபிய தேசிய இராணுவப்படை









நீண்டகாலமாகப் போராடி வருகின்றது. அதன் ஓர் அங்கமாக அந்த நகரில் உள்ள பயங்கரவாதிகள் மற்றும் கிளர்ச்சியாளர்களின் நிலைகளைக் குறிவைத்து இராணுவம் வான் தாக்குதலை நடத்தி வருகின்றது. அந்த வகையில் நேற்று முன்தினம், டெர்னா நகரில் உள்ள தார் அல்-ஹமார் மாவட்டம் மற்றும் அல் பட்டாயா ஆகிய இடங்களில் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. இந்த வான் தாக்குதல் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வான்தாக்குதலில் பெண்கள், சிறுவர்கள் உட்பட அப்பாவி மக்கள் 15 பேர் பரிதாபமாக உயிர் இழந்தனர். மேலும் 17 பேர் படுகாயம் அடைந்தனர். வான்தாக்குதல் குறித்து கருத்து தெரிவிக்க இராணுவம் மறுத்துள்ளது.

## இந்தோனேசியாவில் நிலநடுக்கம்

இந்தோனேசியாவில் உள்ள அம்பான் என்ற தீவின் அருகே திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 6.3 ரிச்டர் என அளவுகோலில் பதிவாகியுள்ளது என வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேசிய நாடு பல்வேறு தீவுகளைக் கொண் டது. இது அதிக அளவில் நிலநடுக்கம் ஏற்படும் நெருப்பு வளையப் பகுதியில் அமைந்துள்ளது.

இதனால் அடிக்கடி பூகம்பம் ஏற்பட்டு வருகிறது. இதே போல நேற்றும் அங்கு பூகம்பம் ஏற்பட்டது. சுமத்ராவை ஒட்டியுள்ள அம்பான் என்ற தீவின் அருகே கடலில் நிலநடுக்க மையம் இருந்தது. கடலுக்கு அடியில் 32 கிலோ மீற்றர் ஆழத்தில் அதன் மையப்புள்ளி அமைந்திருந்தது. ரிச்டர் அளவுகோலில் 6.3 ஆக நிலநடுக்கம் பதிவானது.

இந்தத் திடீர் நிலநடுக்கத்தால் அப்பகுதியில் இருந்த வீடுகளும், கட்டடங்களும் குலுங்கின. இதனால் மக்கள் அலறியடித்து வெளியே ஓடினார்கள். தொடர்ந்து ஐந்து முறைக்கு மேல் நில அதிர்வுகளை உணர்ந்தனர் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை. ஆனால், நிலநடுக்கத்தால் சிறியளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என அமெரிக்க புவியியல் ஆய்வு மையத்தின் இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடகொரியாவில் அணு ஆயுத சோதனையால் 200 பேர் சாவு?



வடகொரியாவில் அணு ஆயுதச் சோதனை நடந்த இடத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் நிகழ்ந்த சுரங்க விபத்தில் 200 பேர் பலியாகினர் என ஜப்பான் நாட்டுச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சமீப காலமாக வடகொரியா ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகின்றது. அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் எதிர்ப்புக்களை மீறி வடகொரியா இந்தச் சோதனைகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது.

அந்த வரிசையில் கடந்த செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி மாபெரும் நிலத்தடி அணுகுண்டு வெடிப்புச் சோதனை ஒன்றை அந்நாடு நடத்தியது. இது அந்த நாடு நிகழ்த்திய ஆறாவது சோதனையாகும்.

இந்தச் சோதனை நடந்து முடிந்த சில நாள்களில் சோதனை நடைபெற்ற புங்கிய ரி என்னும் இடத்தில் உள்ள சுரங்கம் ஒன்று இடிந்து விழுந்தது. இந்த விபத்தில் 100 தொழிலாளர்கள் பலியாகினர். தொடர்ந்து நடைபெற்ற மீட்புப் பணிகளின் போது மீண்டும் ஒருமுறை சுரங்கத்தில் மண் சரிந்து விபத்து ஏற்பட்டது. அப்போது மேலும் 100 பேர் என மொத்தம் 200 பேர் பலியாகியுள்ளனர் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அணு ஆயுத சோதனை காரணமாகவே இந்த விபத்துகள் நடந்துள்ளன என ஜப்பான் நாட்டுத் தொலைக்காட்சி நிறுவனம் அசாஹி செய்தி வெளியிட்டுள்ளது.

## அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் ரஷ்ய தலையீடு குறித்த விசாரணை — குற்றச்சாட்டு பதிவு

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் பின்னணியில் ரஷ்யாவின் தலையீடு பற்றிய விசாரணையில் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் பின்னணியில் ரஷ்யாவின் தலையீடு இருந்தது எனக் குற்றச்சாட்டு எழுந்தது. ட்ரம்பை எதிர்த்துப் போட்டியிட்ட ஹிலாரி கிளிண்டனைத் தோற்கடிப்பதற்காக சர்ச்சைக்குரிய மின்னஞ்சல்கள் வெளியிட்டும், சமூக ஊடகங்களில் ஊடுருவியும் ரஷ்யா சதி செய்தது எனக் கூறப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதற்காக அமெரிக்கப் புலனாய்வுத்துறை (எப்.பி.ஐ.) முன்னாள் இயக்குநர் ராபர்ட் முல்லர் தலைமையிலான சிறப்பு விசாரணைக்குழு ஒன்றை ட்ரம்ப் அரசு நியமித்தது. கடந்த மே மாதம் முதல் நடந்து வந்த இந்தச் சிறப்புக் குழுவின் விசாரணை தற்போது முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது.

அதன்படி இந்த விசாரணையில் தற்போது குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டு உள்ளது. பெடரல் நீதிபதியிடம் வழங்கப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டு குறித்த விவரங்கள் இந்த வாரத்தில் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதைத்தொடர்ந்து உடனடியாக கைது நடவடிக்கைகளும் ஆரம்பமாகும்.

இதற்கிடையே தனது பிரசாரத்துக்கும், ரஷ்யாவுக்கும் இடையே தொடர்பு இருப்பது எனக் கூறப்படும் குற்றச்சாட்டுப் போலியானது எனவும் கூறியுள்ளார்.




# கிரிக்கெட் விருது வழங்கும் விழாவில்

# ஹேரத், அசேலவுக்கு அதிக கௌரவம்

இலங்கைக் கிரிக்கெட்டில் திறமைகளை வெளிப் படுத்திய வீரர்களைக் கௌரவிக்கும் வகையில் இலங்கைக் கிரிக் கெட் நிறுவனத்தினால் நடத்தப் படுகின்ற டயலொக் கிரிக்கெட் விருதுகள் வழங்கும் விழாவில் 2016ஆம் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதை முதற்தடவையாக இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து ஜாம்பவனான ரங்கன ஹேரத் பெற்றுக் கொண்டார்.

இதன்படி, கடந்த 3 வருடங்களாக வருடத்தின் சிறந்த வீரருக்கான விருதைப் பெற்றுவந்த இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அஞ்சலோ மத்தியூஸைப் பின் தள்ளி இவ்விருதைத் தட்டிச்சென்ற ஹேரத், தொடர்ச்சியாக 3ஆவது தடவையாகவும் வருடத்தின் சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாளருக்கான விருதையும் பெற்றுக்கொண்டார்.

உள்ளூர் மற்றும் சர்வதேச அரங்கில் திறமைகளை வெளிப்படுத்திய வீர வீராங்கனைகளைக் கௌரவிக்கும் வகையில் டயலொக் அக்ஷியாட்டா நிறுவனத்தின் பூரண அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் விருது வழங்கும் விழா நேற்று முன் தினம் பத்தரமுல்லையில் உள்ள வோர்டஸ் ஏட்ஜ் ஹோட்டலில் மிகவும் விமர்சையாக இடம்பெற்றது. இதன்போது 60 விருதுகள் வழங்கப்பட்டன.

இதில் அண்மைக்காலமாக இலங்கை அணியில் சகலதுறையிலும் பிரகாசித்து வருகின்ற அசேல குணரத்ன 4 விருதுகளைப் பெற்றுக் கொண்டார். வருடத்தின் சிறந்த ரி-20 துடுப்பாட்ட வீரர், சிறந்த ரி-20 சகலதுறை வீரர், ஒருநாள் போட்டியின் வருடத்தின் சிறந்த சகலதுறை வீரர் மற்றும் வருடத்தின் எதிர்பார்ப்பு மிக்க வீரர் ஆகிய 4 விருதுகளையும்



அவர் தட்டிச் சென்றார்.

இதேவேளை, இலங்கை அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்க, வருடத்தின் சிறந்த ரி-20 பந்துவீச்சாளருக்கான விருதை தட்டிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், வருடத்தின் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரருக்கான விருதை தனஞ்ஜய டி சில்வா பெற்றுக் கொண்டமையுடன், சிறந்த டெஸ்ட் சகலதுறை வீரருக்கான விருதை டில்ருவன் பெரேரா பெற்றுக்கொண்டார்.

இந்த நிலையில், வருடத்தின் சிறந்த ஒரு நாள் பந்து வீச்சாளருக்கான விருதை சுரங்க லக்மால் பெற்றுக்கொண்ட அதேவேளை, சிறந்த ஒரு நாள் துடுப்பாட்ட வீரருக்கான விருதை குசல் மெண்டிஸ் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் பெரிதும் எதிர்பார்க்கப் பட்ட வருடத்தின் வளர்ந்து வளரும் வீரருக்கான விருதை விக்கெட் காப்பாளரும், அதிரடித் துடுப்பாட்ட வீரருமான நிரோஷன் திக்வெல்ல பெற்றுக்கொண்டார்.

பெண்கள் பிரிவில், ஒரு நாள் மற்றும் ரி-20 போட்டிகளின் வருடத்தின் சிறந்த துடுப்பாட்ட வீராங்கனைக்கான விருதை சமரி அத்தப்பத்து பெற்றுக்கொண்டமையுடன், வருடத்தின் சிறந்த ரி-20 பந்துவீச்சாளராக சுகன் திகா குமாரியும், ஒரு நாள் பந்து வீச்சாளராக தற்போதைய அணியின் தலைவி இனோகா ரணவீரவும் தெரிவாகினர்.

இம்முறை விருது வழங்கும் விழாவில் சிறப்பு விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன. இதில் வருடத்தின் சிறந்த சர்வதேசப் போட்டி நடுவருக்



கான விருதை குமார் தர்மசேன பெற்றுக்கொண்டார். முதற்தடவையாக அறிமுகப்படுத்தப்பட்ட வாழ்நாள் சாதனையாளருக்கான விருதை முன்னாள் வீரர் நீல் பெரேரா பெற்றுக்கொண்டார்.

இந்த நிலையில் கடந்த வருடம் முதல் வழங்கப்பட்டு வருகின்ற வருடத்தின் சிறந்த ஊடகவியலாளருக்கான விருதை சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் விளையாட்டு ஆசிரியர் சம்பிக்க பெர்ணாந்து பெற்றுக்கொண்டார்.

டயலொக் ஆசியாடா நிறுவனத்தின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக 5 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விருது வழங்கும் விழாவில் சிறப்பு விருந்தினராக இந்திய அணிக்கு உலகக் கிண்ணத்தை முதற்தடவையாக வென்று கொடுத்த அவ்வணியின் முன்னாள் தலைவரான கபில் தேவ் கலந்துகொண்டமையுடன், பிரதம விருந்தினராக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவும் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கபில்தேவ் இந்நிகழ்வில் உரையாற்றுகையில், இலங்கை கிரிக்கெட்டின் வளர்ச்சியை எனது இளமைப் பருவத்திலிருந்து பார்த்து வருகின்றேன்.

நான் இந்திய அணியில் இடம்பெற்ற ஆரம்ப காலம் முதல் இலங்கை கிரிக்கெட் உலகம் முழுவதும் பிரபல்யமடைந்து காணப்பட்டது. மிகவும் குறுகிய காலப்பகுதியில் உலகை நீங்கள் வெற்றிகொண்டீர்கள். இது தனியொரு வீரரால் கிடைத்த வெற்றி அல்ல. மாறாக இதனுடன் தொடர்புபட்ட அனைவரது முயற்சிகளின் பிரதிபலனாகத் தான் நான் இதைப் பார்க்கின்றேன்.

கடந்த காலங்களில் விளையாடிய பல போட்டிகளில் நீங்கள் தோல்விகளைச் சந்தித்தாலும், உங்களுடைய ரசிகர்கள் என்றும் போல மைதானத்துக்கு வந்து உற்சாகமளிக்கின்றார்கள் என அவரது உரையில் தெரிவித்திருந்தார். (ப)

# இலங்கை அணியில் மத்தியூஸ், குசல் பெரேரா

பாகிஸ்தானுக்கு எதிராக ஒருநாள் தொடர், ரி-20 தொடரை முற்றிலுமாக இழந்த இலங்கை இந்தியாவுடன் மோதவுள்ளது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை அணி மூன்று டெஸ்ட் போட்டிகள், மூன்று ஒருநாள் போட்டி மற்றும் மூன்று ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

டெஸ்ட் அணியில் முன்னாள் அணித்தலைவர் மத்தியூஸ், குசல் பெரேரா பங்கேற்கத் தயார் என இலங்கை கிரிக்கெட் சபையின் ]CK ஆஸ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர்




சந்திப்பின் போதே இதனைக் குறிப்பிட்டார். இருவரும் நீண்ட நாள்களாகவே காயத்தால் அவதிப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# விடைபெறுகிறார் ஆஷிஸ் நெஹ்ரா




இந்தியக்கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஆஷிஸ் நெஹ்ரா நியூசிலாந்துக்கு எதிராக நடைபெறும் ரி-20 போட்டியுடன் ஓய்வுபெறவிருக்கிறார்.

இந்திய அணியில் அதிக அணித்தலைவர்களுக்கு கீழ் விளையாடிய ஒரே வீரர் நெஹ்ரா ஆவார். கடந்த 1999ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நெஹ்ரா அறிமுகமானார்.

வேகப்பந்து வீச்சாளருக்குரிய எந்த அடையாளமுமே இல்லாத இவர் மணிக்கு 140 கிலோ மீற்றர் வேகத்தில் பந்து வீசக் கூடிய திறமை கொண்டவர்.

38 வயதாகும் நெஹ்ரா, தனது 18 ஆண்டு கிரிக்கெட் வாழ்வில் பல காயங்களை சுமந்துள்ளார். உடல் முழுதும் ஏற்பட்ட காயங்களால் இதுவரை 12இற்கும் அதிகமான அறுவைச் சிகிச்சைகளைச் செய்து கொண்டுள்ளார்.

அத்துடன் இந்திய அணியில் இடம் கிடைக்காமல் பல முறை புறக்கணிக்கப்பட்டபோது மன தளவிலும் பல காயங்கள் ஏற்பட்டன என்றும் தெரிவித்திருக்கின்றார்.

முன்னாள் இந்திய அணித் தலைவர் அசாருதீனின் தலைமையின் கீழ் அறிமுகமான நெஹ்ரா, அதன் பின்னர் கங்குலி, ட்ராவிட், அனில் கும்ளே எனப் பல அணித்தலைவர்களின் தலைமையில் விளையாடி, இறுதியாக விராட் கோஹ்லியின் கீழ் விளையாட உள்ளார்.

இவர் விடைபெற இருக்கும் இந்தப் போட்டியிலேயே ஷ்ரேய்ஸ் ஐயர் மற்றும் முகமது சிராஜ் என்னும் வீரர்கள் அறிமுகமாக இருக்கின்றமை சிறப்பம் சமாகும்.

(ப)

## மும்பை அணிக்கு திரும்பிய ரகானே

நியூசிலாந்துக்கு எதிரான ரி-20 கிரிக்கெட் தொடரில் இடம் கிடைக்காதமையால் ரஞ்சி கிண்ணப் போட்டியில் மும்பை அணிக்காக விளையாட உள்ளார் ரகானே.

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் வரை நடைபெற்றது. இதற்கான இந்திய அணியில் ரகானே இடம்பிடித்திருந்தார்.

இந்தத் தொடர் முடிவடைந்த நிலையில் நேற்று ரி-20 கிரிக்கெட் தொடர் தொடங்கியது. இதற்காக இந்திய அணியில் ரகானே இடம் பெறவில்லை. இதனால் அவர் ரஞ்சி கிண்ணப் போட்டியில் விளையாட முடிவு செய்தார்.

மும்பை அணி இன்று ஒரிசாவை எதிர்கொள்கின்றது. இந்தப் போட்டி புவனேஸ்வரில் நடக்கிறது. அவர் மும்பை அணியுடன் இணைந்து இன்று போட்டியில் பங்கேற்க உள்ளார். ரி-20 அணியில் இடம்பிடித்துள்ள ஷ்ரேயாஸ் அய்யர் மும்பை அணியில் இருந்து விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## போட்டியை வெல்லத் திறமை வேண்டும்

— தினேஷ் சந்திமால்



கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற ஆன்மீகவாதிகளின் ஆசீர்வாதம் மட்டும் போதாது திறமையும் வேண்டும் என்று இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் தினேஷ் சந்திமால் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்திற்குச் சென்று பாகிஸ்தானுடன் விளையாடிய இலங்கை இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக வென்று சாதித்தது.

இந்த டெஸ்ட் தொடரை சந்திமால் தலைமையிலான இலங்கை அணி வெல்வதற்கு எனது ஆசீர்வாதமே காரணம் என்று பெண் ஆன்மீகவாதி ஒருவர் பேஸ்புக்கில் பதிவேற்றிய படம் ஒன்று பலத்த சர்ச்சையை உருவாக்கியது.

இந்த நிலையில் நேற்று இலங்கைக் கிரிக்கெட் நிறுவனக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது சந்திமாலிடம் இதுகுறித்துக் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அதில் டெஸ்ட் தொடருக்கு உங்களுக்கு கிடைத்த ஆசீர்வாதம் ஒருநாள் தொடருக்கு கிடைக்கவில்லையா என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த சந்திமால், நான் ஆசீர்வாதம் பெற்றமை என்னுடைய தனிப்பட்ட விடயம். எந்த மதகுருவாக இருந்தாலும் நான் ஆசீர்வாதம் பெறத் தயாராகவே இருக்கின்றேன். அதற்காக ஆசீர்வாதத்தை மட்டும் வைத்துக்கொண்டு போட்டியில் வெற்றிபெற்றுவிட முடியாது. அவை எல்லாவற்றையும் விடத் திறமை தான் முக்கியம் என்று ஆன்மீகத்தை நாடிய சர்ச்சைக்கு முற்றுப் புள்ளிவைத்தார் சந்திமால்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கைக் கிரிக்கெட்டின் மூன்று வகையான போட்டிகளுக்கும் நியமிக்கப்பட்டிருந்த மூன்று தலைவர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

## இந்தியத் தொடரின் பின் புதிய பயிற்றுவிப்பாளர்

இலங்கை கிரிக்கெட் அணிக்கு இவ்வருட இறுதியில் நிரந்தப் பயிற்சியாளர் ஒருவர் புதிதாக நியமிக்கப்படுவார் எனவும் இந்திய அணியுடனான தொடரின் பிறகு இதுதொடர்பில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் இலங்கைக் கிரிக்கெட் நிறைவேற்றுக் குழுவின் பணிப்பாளர் ஏஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணியுடன் இடம்பெற்று முடிந்த டெஸ்ட், ஒரு நாள் மற்றும் ரி-20 போட்டித் தொடர் குறித்து ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் இலங்கைக் கிரிக்கெட் சபையில் இடம்பெற்றது. இதில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே ஏஷ்லி டி சில்வா இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு-

இலங்கை அணியின் நிரந்தர பயிற்றுவிப்பாளர் பதவிக்கு தற்போது இடைக்காலப் பயிற்சியாளராகச் செயற்பட்டு வருகின்ற நிக் போத்தாஸ் உள்ளிட்ட ஐவரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. அவர்களுடனான பேச்சுகளை தொலைபேசி மற்றும் ஸ்கைப் மூலமாக தற்போது மேற்கொண்டு வருகின்றோம். இதன்படி பயிற்சியாளர்களுக்கான பதவிகளுக்காக ஆசிய, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பித்துள்ளனர். எனினும், அவர்களில் பெரும்பாலானோர் தற்போது வேறு அணிகளுடன் கடமையாற்றி வருவதால் அவர்களது பெயர்களைத் தற்போது வெளியிட முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள இந்தியத் தொடரிலும் இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக நிக் போத்தாஸ் செயற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும், அது தொடர்பில் போத்தாஸுடன் பேச்சு நடத்தி இந்தியத் தொடரில் பங்கேற்கவுள்ள ஏனைய உதவி பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

இந்திய அணியுடனான போட்டித் தொடர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி நிறைவடையவுள்ள நிலையில், அதன்பிறகு புதிய பயிற்றுவிப்பாளர் ஒருவர் 2019 உலகக் கிண்ணப் போட்டிகள் வரை நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ப)



# சின்னையாவை வீட்டுக்கு அனுப்பக் காரணம் என்ன?

## அமைச்சர் தயாசிறி நேற்று விளக்கம்

கொழும்பு, நவ.2

முன்னாள் கடற்படைத்தளபதி ட்ரவிஸ் சின்னையாவுக்கு சேவை நீடிப்பு வழங்காதமை ஏன் என அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் தயாசிறி ஜயசேகர விளக்கியுள்ளார்.

ஏனையோரும் கடற்படைத் தளபதியாகப் பதவி வகிக்கச் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் இவ்வாறு சின்னையாவின் சேவைக் காலம் நீடிக்கப்படவில்லை என அவர் கூறியுள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட ட்ரவிஸ் சின்னையாவின் பதவிக் காலத்தை இரண்டு மாதங்களுக்கு வரையறுக்க நேரிட்டது. அவருக்கு அடுத்தபடியாகப் பதவி வகிப்போரும் கடற்படைத் தளபதியாகப் பதவி வகிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கிலேயே, சின்னையாவுக்கு ஓய்வு வழங்கப்பட்டது.

கடற்படைத்தளபதியாக பதவி வகிக்கவேண்டிய, போரில் பெரும் சேவைகளை வழங்கிய மேலும் சில சிரேஸ்ட உறுப்பினர்கள் கடற்படையில் சேவையாற்றி வருகின்றனர். சின்னையாவுக்கு ஓராண்டு காலச் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தால் ஏனையவர்களுக்குக் கடற்டைத் தளபதியாகப் பதவி வகிக்க சந்தர்ப்பம் கிட்டியிருக்காது – என்றார்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்த செல்வதுரைகிருபாகரன்என்பவருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டது.

தெஹிவளைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரியான சுனில் தாப்ரூ என்பவரை சுட்டுக்கொன்றதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இது குறித்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டது

அத்தோடு, இவர் மீது சுமத்தப்பட்ட மேலும் இரு குற்றச்சாட்டுக்களுக்காக ஐந்து வருடங்கள் கடூழியச்சிறைத்தண்டனையும் 25 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் எந்தவொரு பகுதியையும் பிளவடையச் செய்யசந்தர்ப்பம்வழங்கப்படாது. புதிய அரசமைப்பில் பிரிவினை வாதத்தைத் தூண்டுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு எவ்வித சரத்துக்களும்கிடையாது.

எனினும் தற்போதைய அரசமைப்பின் 157ஆம் சரத்தில் இலங்கையில் தனிநபர்கள் அல்லது குழுக்கள் நாட்டை பிளவடையச்செய்யமுடியாதுஎனவும், அவ்வாறு பிரிப்பதற்கு முயற்சித்தால் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது – என்றார்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

தமது அணி மீது மைத்திரி அரசினால் அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், நாடாளுமன்றில் தமது உரிமைகள் பறிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ள மஹிந்த அணி, இவை குறித்தும் தேர்தலை அரசு தாமதப்படுத்தி வருகின்றமை தொடர்பிலும் முறையிடவுள்ளதாகக் கூறியுள்ளது.

சுவிற்ஸர்லாந்தில் அமைந்துள்ள அனைத்துலக நாடாளுமன்ற ஒன்றியத் தலைமையத்துக்கு ஒரு குழுவினரும், பங்களாதேஷில் அமைந்துள்ள பொது நலவாய நாடுகளின் நாடாளுமன்ற தலைமையகத்துக்கு மற்றொரு குழுவினரும் இந்த வார இறுதியில் பயணிப்பர் என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கூறினார்.

## இளைஞரைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த மாதம் 22ஆம் திகதி அரியாலை, மணியந்தோட்டம் உதயபுரம் கடற்கரை வீதிச் சந்தியில், டொன் பொஸ்கோ ரிச்மன் என்ற இளைஞர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனையடுத்து. நடத்தப்பட்ட விசாரணைகளில், கொலைக்கு முன்னதாக அந்த வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ என்பன தொடர்பான காணொளிப்பதிவுக் காட்சிகள் கிடைத்தன.

இதன் அடிப்படையில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. குறித்த விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் கையளித்திருந்தார் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ தொடர்பாக நடத்திய விசாரணைகளில் அவை இரண்டும் யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் உள்ள சிறப்பு அதிரடிப் படையினரின் பயன்பாட்டில் இருந்தமை கண்டறியப்பட்டது.

இதையடுத்துக் கடந்த திங்கள்கிழமை சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது. கொலையுண்ட இளைஞருடன் மோட்டார் சைக்கிளில் கூடப் பயணித்த இளைஞரும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன் தினம் இரவு பண்ணையில் உள்ள சிறப்பு அதிரடிப்படை முகாமுக்குள் நுழைந்து தேடுதல் நடத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர், கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கி, மோட்டார்சைக்கிள், ஓட்டோ ஆகியவற்றைக் கைப்பற்றியுள் ளனர்.

எனினும், இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இன்னமும் கைது செய்யப்படவில்லை.

## அரிசி,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அதன்படி, சம்பா அரிசி ஒரு கிலோ 80 ரூபாவிலிருந்து 78 ரூபாவாகவும், பருப்பு ஒரு கிலோ 152 ரூபாவிலிருந்து 148 ரூபாவாகவும் குறைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இனங்களுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க நேற்றுச் சபையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதிய அரசமைப்பு குறித்த இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதம், நாடாளுமன்றில் நேற்று மூன்றாவது நாளாக நடைபெற்றது. இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கைத் தனியாகப் பிரிக்க முடியாது. அவ்வாறு பிரிப்பதற்கு எந்தவிதமான சாத்தியக் கூறுகளும் இல்லை. அவ்வாறு தனியாகப் பிரிக்கப்பட்டால், வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யும் பொருள்களைக் கூட அவர்கள் விற்பனை செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போகும்.

புதிய அரசமைப்பின் மூலம் நாடு பிளவுபடும் என்று அச்சம் கொள்ளத்தேவையில்லை. அவ்வாறு சிலர் கூறுவதில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்றார்.

## தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக நுழைவாசல்களை மூடி நிர்வாகத்தை இயங்க விடாது மாணவர்கள் இந்தப் போராட்டத்தினை மேற்கொண்டு வரும் நிலையில், பல்கலைக்கழக நிர்வாகம், குறித்த மாணவர்களை அழைத்துப் பேச்சில் ஈடுபட்டது.

அந்தப் பேச்சு தோல்வியடைந்த நிலையில் பல்கலைக்கழக நிர்வாகத்தைச் சூழவுள்ள பீடங்களான கலை, விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய மூன்று பீடங்களின் கற்றல் செயற்பாடுகளை இடைநிறுத்து மாறு துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் உத்தரவிட்டிருந்தார்.

இதை ஏற்றுக்கொள்ளாத மாணவர்கள் தமது நிர்வாக முடக்கப் போராட்டத்தை நேற்று மூன்றாவது நாளாகவும் மேற்கொண்டனர்.

பல்கலைக்கழகத்துக்குள் யாரும் நுழையாத வகையில் வாசலை அடைத்து மாணவர்கள் தமது போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்

அரசில் கைதிகளின் வழக்குகள் மீண்டும் வவுனியா நீதிமன்றுக்கு மாற்றப்படும் என உறுதியான பதில் அரசிடமிருந்து கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என அவர்கள் கூறியுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதேவேளை, இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாகக் கைதடியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவ அலகு மாணவர்களும் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

அத்துடன் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் நேற்று கல்லூரிக்கு முன்பாகப் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் நடத்தினர்.

## உள்நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பு குறித்த இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதம், நாடாளுமன்றில் நேற்று மூன்றாவது நாளாக நடைபெற்றது. இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே, எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விவாதமாகும். நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டு, அனைத்துத் தரப்பினரதும் கருத்துகள் உள்வாங்கப்பட்டு 40 வருடங்களின் பின்னர் அரசமைப்பு மாற்றம் குறித்து கலந்துரையாடி வருகிறோம்.

### பிரிக்கப்படாத நாட்டுக்குள் தீர்வு

இந்த நாட்டில் மீயுயர் சட்டம், மக்களுக்காக உருவாக்கப்படல் வேண்டும். அது அனைத்து மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவேண்டியது அவசியமாகும். அது, பிரிக்கப்படாத நாட்டில் சகலரது உரிமையையும் உறுதி செய்யக் கூடிய வகையில் அமைந்திருக்க வேண்டும்.

ஜனநாயகமும் பன்மைத்துவமும் என்பன ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ள விடயங்களாகும். ஒன்றோடுஒன்றைப் பலப்படுத்தும்வகையில்இவைஅமைக்கப்படவேண்டும். இவற்றின் ஊடாகவே பிரிக்கப்படாத நாட்டை உறுதிப்படுத்தமுடியும்.

இவ்வாறான நிலையில் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில்விக்ரமசிங்க ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் அரசமைப்புத் தயாரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### முதல்முறை ஒன்றிணைவு

வரலாற்றில்முதல்தடவையாக அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்திருக்கிறோம். நாம் கடந்த 70 வருடங்களாகப் பல பாடங்களைக் கற்றுள்ளோம். முப்பது வருடப் போரைக் கண்டிருக்கிறோம். இந்த நாட்டில் பல்வேறு அரசுகள் போரில் ஈடுபட்டமையானது பொருளாதார அபிவிருத்திக்குத் தடையாக அமைந்தது.

### 25 வருடமாக முயற்சி

கடந்த 25 வருடங்களாகப் பலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இரு பிரதான கட்சிகளுக்கிடையில் தேசியப் பிரச்சினை விடயத்தில் இணக்கப்பாடு ஏற்படவில்லை. இதற்குயுத்தமும் காரணமாக இருந்தது. இப்போது போர் என்ற தடை நீங்கியுள்ளது. ஆனால் போர் ஆரம்பிக்கப்பட்ட காரணத்துக்கான தீர்வுகள் இன்னும் எட்டப்படவில்லை.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுவேண்டிப் போர் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இன்னும் அவை தீர்க்கப்படாதிருப்பது துரதிஷ்டவசமானதாகும்.

வளர்ச்சி,முன்னேற்றம் மற்றும் சர்வதேச அந்தஸ்தைப் பெறுதற்கான தீர்வை நோக்கி நாம் பயணிக்கவேண்டும். இதனைக் குழப்புவதற்குப் பலர் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நாட்டு நலனுக்காகவன்றிச் சொந்த அரசியல் இலாபத்துக்காக அவ்வாறு செயற்படுகிறார்கள்.

### சர்வதேச நாடுகள் கூர்ந்து அவதானம்

எமதுநடவடிக்கைகள்சர்வதேச நாடுகளால் அவதானிக்கப்பட்டு வருகின்றன. இதனை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். ஜனநாயகம் என்பது நாட்டில் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும். நிர்வாகக் கட்டமைப்புக்கள் அதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்படவேண்டும்.

இதன் அடிப்படையிலேயே இந்த அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றோம். எமது நாட்டின் மீதான சர்வதேச அழுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என நாம் நினைக்கிறோம்.

### அதிகபட்ச அதிகாரங்கள் கொண்ட தீர்வு தேவை

புதியஅரசமைப்பைத்தயாரிப்பதற்குப் பொதுவான விடயங்களில் இணக்கப்பாடு அவசியமானது. சாத்தியப்பாடுமிக்க ஒருமித்த கருத்துக்களுடன் புதிய அரசமைப்பைத்தயாரிக்கவேண்டும் என்பதேஎமதுஎதிர்பார்ப்பாகும். அது, பொதுமக்களின் கருத்துக்களையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு,கிழக்கைச்சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் அதிகபட்ச அதிகாரங்களைப் பகிரக் கூடிய தீர்வை எதிர்பார்க்கிறார்கள்.

இலங்கை பல்லின, பன்மொழிபேசும் சமுதாயங்கள் வாழும் நாடு. இங்கு சட்டவாக்கம், நிறைவேற்றுஅதிகாரம் என்பன உரிய முறையில் முழு நாட்டிலும் சமமான முறையில் பகிரப்பட வேண்டும். எந்தவொரு காரணத்துக்காகவும்,ஏதாவது விசேட காரணங்கள் இருந்தாலேயொழிய இது மாற்றப்படக் கூடாது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக் காலத்தில், எந்தவொரு தீர்வும் அதியுச்ச அதிகாரப் பகிர்வை வழங்கக் கூடியதாக இருக்கவேண்டும். அது நாட்டின் இறையாண்மைக்குப் பங்கம் விளைவிக்காததாக இருத்தல்வேண்டும். பெரும்பான்மையினர் சமாதானத்தை நாடுவதில் ஈடுபடவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தச் செயன்முறையில் தான் நாம் ஈடுபட்டுவருகிறோம். துரதிர்ஷ்டமாக அவருடன் இணைந்திருந்தஅரசியல் கட்சி உறுப்பினர்கள், இன்று மாற்றுக் கருத்துகளை வெளியிட்டு வருகிறார்கள்.

### சமஷ்டிக் கோட்பாட்டை முன்னர் ஏற்றவர் பீரிஸ்

ஒஸ்லோவில் ஜி.எல். பீரிஸ் கருத்து வெளியிட்டிருந்தபோது, உள்ளகசுயநிர்ணயம்தொடர்பான சமஷ்டிக் கோட்பாட்டின் அடிப்படையில்ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாணப்படவேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

இவர்கள் கடந்த காலங்களில் என்ன கூறியிருந்தார்கள் என்பதை நாட்டுமக்கள் உணரவேண்டும்என்பதற்காகவேநான்இதனை இங்கே குறிப்பிடுகிறேன்.

போர் முடிவடைந்துள்ளது. இப்போது மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்று முன்வைக்கப்படவேண்டும் என்பதை அரசே சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறியிருந்தது. ஆகையால் அவ்வாறான தீர்வை முன்வைப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பது கட்டாயமாகும்.

சர்வதேசத்துக்கு,இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். சர்வதேச மட்டத்தில் இலங்கை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் – என்றார்.

## ஜனவரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏதாவது உள்ளூராட்சி மன்றங்களில் தொடர்ந்தும் பிரச்சினைகள் காணப்படுமாயின் அவற்றைத் தவிர்த்துத் தேர்தல் நடத்தப்படும் என ஆணைக்குழு கூறியுள்ளது.

# சிறிய மற்றும் நடுத்தர கடன் திட்டத்தை இலங்கையில் விரிவுபடுத்த நடவடிக்கை!

கொழும்பு, நவ. 02

இலங்கையில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை கட்டியெழுப்புவதற்கான கடன் திட்டத்தை மேலும் விரிவுப் படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவை துணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறைக்கான கடன் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது.

இந்தக்கடன்திட்டத்திற்கான கேள்விகள் அதிகரித்து வருகின்றமையினால் குறித்த வேலைத்திட்டத்தின் கால எல்லை நிறைவடைவதற்கு முன்னர், முழு நிதியையும் பயன்படுத்தி சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழிலாளர்களுக்கான சலுகை கடன் தொகையை வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



இந்தக் கடன் திட்டத்தை மேலும் விரிவு படுத்தி பெரும்பாலானோர் பயனடைய கூடிய வகையில் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை மேலதிகமாக பெற்றுக் கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணக்கப்பாடான பேச்சு நடத்துவதற்கு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மன்னாரில் 'வாகை' சஞ்சிகை வெளியீடு!





மன்னார், நவ. 02

மன்னார் 'தமிழமுது நண் பர்கள் வட்டம்' அமைப்பின் ஒரு வருட பூர்த்தியை ஒட்டி 'வாகை' சஞ்சிகை வெளியீட்டு விழா மன்னாரில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு மன்னார் 'தமிழமுது நண்பர்கள் வட்டம்' அமைப்பின் இயக்குநர் வை. கஜேந்திரன் தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

இதன் போது 'வாகை' சஞ்சிகை வைபவ ரீதியாக வெளியீடு செய்து வைக்கப்பட்டுள்ளதுடன், தெரிவு செய்யப்பட்ட 170 பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும், சஞ்சிகை வெளியீட்டு விழாவிற்கு மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மேல், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் சுகந்தி செபஸ்தியன், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் லூட்ஸ் மாலினி வெனிற்றன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

## நாயாற்றுப் பாலத்தை புனரமைக்கக் கோரிக்கை!



முல்லைத்தீவு நாயாற்றுப் பாலத்தின் தகடுகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது என அந்தப் பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.


முல்லைத்தீவு- திருகோணமலை வீதியை குறுக்கறுத்துச் செல்லுகின்ற நாயாற்றுக்கு போடப்பட்டிருக்கின்ற இரும்புப் பாலத்தின் சில பகுதிகள் சேதமடைந்து காணப்படுகின்றன.

பாலத்தின் கீழ் பகுதித் தகடுகள் உப்பு நீரால் அரிக்கப்பட்டு காணப்படுகின்றன, பாலத்தின் இரு பக்கமும் பரவப்பட்டுள்ள தகடுகள் சில சேதமடைந்த நிலையில் உள்ளன எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்தப் பாலத்தை புனரமைக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு - கொக்கிளாய்

## ஆற்றின் கரையோரப் பகுதியை பாதுகாக்கும் நடவடிக்கைகள்!



முல்லைத்தீவு - கொக்கிளாய் ஆற்றின் கரையோரப் பகுதிகளைப் பாதுகாக்கும் வகையில் கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த மாவட்டத்தின் சிறு கடல் பகுதியான கொக்கிளாய் ஆற்றின் கரையோரப் பகுதியை பாதுகாக்கவே இவ்வாறான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கோக்கிளாய், புளியமுனை மற்றும் அதனையண்டிய பகுதிகளில் பெண்கள் அமைப்பின் ஊடக கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## 25ஆயிரம் ரூபா வாகனத் தண்டப்பணம் நேற்றுமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டது!

கொழும்பு, நவ. 02

25 ஆயிரம் ரூபா வாகனத் தண்டப்பண சட்டம் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது என வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவிப்பு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் வெளியிடப்பட்டுள்ளது.

போதையில் வானத்தைச் செலுத்துதல் காப்புறுதி சான்றிதழ் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனத்தைச் செலுத்துதல், ரயில் கடவைகளில் கவனயீனமாக வாகனங்களை செலுத்துதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்கு இந்த தணடப்பணம் விதிக்கப் படவுள்ளது.



அதேபோன்று, வயது குறைந்த சிறுவர்கள் வாகனங்களை செலுத்துவதில் ஊக்குவிக்கப்படும் பட்சத்தில் அதற்காக 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப் படவுள்ளது.

இந்தத் தண்டப்பண முறை நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொறியியலாளர்களுக்கு நியமனம் வழங்கினார் வடமாகாண ஆளுநர்









வடக்கு மாகாணப் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் சேவைக்கு இணைக்கப்பட்ட பொறியியலாளர்களுக்கான நியமனக்கடிதங்களை வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே நேற்று வழங்கினார்.

வடக்கில் நிலவும் பொறியியலாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் வகையில் ஒப்பந்த அடிப்படையில் 7 பொறியியலாளர்களுக்கான நியமனங்கள் நேற்று வழங்கப்பட்டன. நேற்று முற்பகல் 9 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணப் பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ், ஆளுநரின் உதவிச் செயலாளர் எ.ஏக்ஸ். செல்வநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அரசியல் கைதிகள் குறித்து கலந்துரையாட வாருங்கள்

## வடக்கு - கிழக்கு அரசியல்வாதிகளுக்கு யாழ்.பல்கலைகழக மாணவர் ஒன்றியம் அழைப்பு

*(எஸ். நிதர்ஷன்)*

யாழ்ப்பாணம், நவ.2

தமிழ் அரசியல் கைதிகளின் துரிதமான விடுதலை தொடர்பில் வடக்கு – கிழக் கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துரையாட வருமாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்பகிரங்கஅழைப்பு விடுத்துள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில்தொடர்உண்ணா விரதத்தில் ஈடுபட்டுவரும் மூன்று தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் முடக்கி மூன்றாவது நாளாகவும் மாணவர்கள் நேற்றுப் போராடினர்.

இதன்போதே அவர்கள் இந்தப்பகிரங்கஅழைப்பை விடுத்தனர்.

இது குறித்து அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாகிய நாம் அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும்மூன்று அரசியல் கைதிகளின் உடனடிக் கோரிக்கைகள் மற்றும் ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்உரிமை உள்ள மாணவர்கள் என்ற வகையில்பலபோராட்டங்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம்.

தமிழ் மக்களின் வாக்குகளால்தெரிவுசெய்யப்பட்டு அவர்களுடைய பிரச்சினைகளை நாடாளுமன்றம் வரை எடுத்து செல்லும் வரை உரிமையைப்பெற்றவர்கள் நீங்கள்என்றமுறையில் அரசியல் கைதிகள் தொடர்பில் உடன் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துயாழ்.பல்கலைகழக மாணவர் ஒன்றியத்துடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளஅழைக்கின்றோம்.

இந்தக் கலந்துரையாடலில்வடக்கு–கிழக்கில்தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும்கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம். இந்த அழைப்பை உதாசீனம் செய்பவர்கள் தமிழ் மக்களின்அபிலாசைகளை உதாசீனம் செய்பவர்களாகக் கருதப்படுவார்கள்.

இந்தக் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்.பல்கலைகழகத்தில் இடம்பெறும் – என்றுள்ளது.

# விவாதம் இன்றும் தொடரும்



கொழும்பு, நவ.2

அரசமைப்பு நடவடிக்கைக் குழுவின் இடைக்காலஅறிக்கை மீதான விவாதம் இன்று வியாழக்கிழமையும் தொடரவுள்ளது.

இதனைச் சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார்.

இடைக்கால அறிக்கை மீதான விவாதம் கடந்த திங்கள்கிழமை முதல் அரசமைப்புச் சபையின் தலைவர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்று வருகின்றது.

குறித்த விவாதத்தில் இன்னும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றவுள்ளதால் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் இன்றும் விவாதம் இடம்பெறும்.

நாளை மாலை
K.T. பிரசாத் வழங்கும்
உலக சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு
மாபெரும் இசை நிகழ்ச்சி
விஷேடமாக சிறுவர், சிறுமியர் தமது பெற்றோருடன், அனைவரும் கலந்து சிறப்பிக்கலாம்.
இடம் : யாழ் / இந்துக்கல்லூரி சபாலிங்கம் மண்டபம்
காலம் : இம்மாதம் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 3:30 மணிக்கு (03.11.2017)



தொடர்புகளுக்கு:
0786125929
077 5504910



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்
அனுசரணை வழங்குவோர்
NLB NATIONAL LOTTERIES
NSB National Savings Bank
cecb
PEOPLE'S BANK
PLC பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி (மக்கள் வங்கியின் ஒரு துணை நிறுவனம்)
இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்
CEYPETCO ENERGIZING THE FUTURE
SPMC
Lanka Sugar Company
SriLankan Airlines





விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனின் 9ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்றுப் பிரான்ஸில் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் புலம்பெயர் தமிழ் மக்கள் பலர் பங்கேற்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.